பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

நம்பிக்கையின்
சின்னம்
அம்பிகா!
தரமான 22 கரட்
தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி: 22839 — 34238

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI | இல. 4574 | 1984 ஜூன் 5 செவ்வாய்க்கிழமை ★★★ தினபதி

அம்பிகா!
உங்களை
அழைக்கின்றாள்!
நவீன டிசைன்களில்
நங்கையர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
Ambiga
Jewellers
77, SEA STREET,
COLOMBO-11.
PHONE: 22839 — 34238,

# பெற்றோலியம் எண்ணெய் பெறுவதில் கஷ்டம்: ரஷ்யா கைவிரிப்பு

## சவூதி அரேபியாவும் இஸ்ரவேல் பிரவேசம் குறித்து இலங்கையை குறை கூறுகிறது

கொழும்பு, ஜூன் 5

பெற்றோலியம் எண்ணெய் பெறுவதில் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது வழங்க முடியாத நிலையில் இருப்பதாகக் கூறி சோவியத் ரஷ்யா கையை விரித்து விட்டது.

இலங்கைக்கு அதிக அளவில் பெற்றோலியம் எண்ணெய்யை வழங்கி வரும் நாடு சவூதி அரே


## உலக சுற்றாடல் தினம்

கொழும்பு, ஜூன் 5

உலக சுற்றாடல் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

சுற்றாடல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நாடெங்கும் உள்ள பாடசாலைகளில் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

(த- 8)



பிரதமர் திரு ஆர். பிரேமதாச ஞாயிற்றுக்கிழமை அன்னையூர் என்னும் மவ்தம மாதிரிக் கிராமத்தை திறந்து வைத்தார்.

இதன் பின்னர் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில்

## தமிழ் மக்களின் உறுதிக்கு

...யா, அந்த நாடும் இப்போது இஸ்ரவேல் பிர வேசம் குறித்து இலங்கையைக் குறை கூறத் தொடங்கிவிட்டது.

எண்ணெய் வளமிக்க அரபு நாடுகளில் தனிச் செல்வாக்குப் பெற்றிருக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரவேல் பிரவேசம் குறித்து இலங்கையைக் கண்டித்திருக்கிறது.

அரபு நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இலங்கையை ஒரு தளமாக இஸ்ரவேல் பயன்படுத்தலாம் என்று அச்சம் தெரிவித்தே பலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர் ஒருவர், இஸ்ரவேலுக்கு இங்கே இடம் கொடுக்கும் இலங்கையின் செயலைக் கண்டித்தார்.

சவூதி அரேபிய அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் அரபு நாடுகளில் இஸ்ரவேல் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறிக் கண்டனம் தெரிவித்தார். இலங்கையில் நலன் காப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த இஸ்ரவேலுக்கு இட

(2ஆம் பக்கம் பார்க்க)

...படத்தில் காணலாம்.

பிரதமரின் தாயார் என். சிஞ்ஞாமியின் ஞாபகார்த்தமாக ஹொரணைத் தொகுதியில் இந்த மாதிரிக் கிராமம் திறந்து வைக்கப்பட்டது. (த-ச)

## வாகரையில் இராணுவ முகாம்

கொழும்பு, ஜூன் 5

மட்டக்களப்பு வாகரையில் இராணுவ முகாம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. (த—மு)

# ...எடுத்துக்காட்டு யாழ். நூலகம்

## புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவில் அமிர்

— தினபதி யாழ். நிருபர்: கே. அரசரத்தினம் —

யாழ்ப்பாணம், ஜூன் 4

புனரமைக்கப்பட்ட யாழ். நூலகக் கட்டடம் தமிழ் மக்களின் உறுதிக்கு எடுத்துக் காட்டு. யாழ். நூலகம் தமிழ் மக்களின் எதிர்கால நம்பிக்கையின் சின்னம். அழிக்க, அழிக்க அது மீண்டும் மீண்டும் வளர்ந்து ஓங்கும் என்றால் இனி எவரும் நூலகத்தை எரிக்கத் துணிய மாட்டார்கள்.

மேற்கண்டவாறு கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம்.

1981 ஜூன் முதலாம் திகதி தீய சக்திகளால் எரிக்கப்பட்ட யாழ். நூலகத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத்தை இன்று முற்பகல் திறந்து வைத்து திரு. அமிர்தலிங்கம் பேசினார்.

திறப்பு விழாவுக்கு மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கத்தை நூலக வாயிலிலிருந்து திரு. சிவஞானம், நூலகக் குழு உறுப்பினர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோர் நூலக மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர்.

மங்கள விளக்கேற்றி நாடாவை வெட்டி நூலகத்தை திரு.

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர் வீட்டு வாடகை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 5

அரசாங்க ஊழியர்களின் வீட்டு வாடகைக் கட்டணம் 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரத்தக்க விதத்தில் இது செயற்படுத்தப்படும்.

ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையிலான நிலுவையை இம் மாதம் முதல் அறவிடும்படி பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை மூலம் கேட்டிருக்கிறது. (த- 11)

# பயங்கரவாத ஒழிப்பில் இஸ்ரவேலர் சிறந்தவர்கள்

## அவர்களின் எதிரிகள் கூட ஒப்புக் கொள்கின்றனர்

— லலித்

கொழும்பு, ஜூன் 5

பயங்கரவாதத்தை ஒழிப்பதில் உலகிலேயே சிறந்தவர்கள் இஸ்ரவேலர்கள் தாம். அவர்களின் எதிரிகள் கூட இதனை ஒப்புக் கொள்கின்றனர். இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு ஏற்படுத்தியதைக் காரணமாக வைத்து எதிர்க்கட்சியினர் அரசியல் லாபம் தேட முயல்கின்றனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இவ்வாறு குற்றஞ் சுமத்தினார்.

மொரட்டுவையில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

நாட்டின் இன்றைய நிலை பற்றி எதிர்க்கட்சியினர் உணர்வதாகத் தெரியவில்லை. இஸ்ரவேலின் உதவி பெற்றால் அரபு நாடுகள் கோபம் அடையும் எனக் கூறுகின்றனர். ஆனால் எம்மைத் தோற்கடிக்க அவர்

(2ஆம் பக்கம் பார்க்க)

# தங்க கடத்தல்?

கொழும்பு, ஜூன் 5

தலைமன்னார் வழியாக இந்தியாவுக்கு பெரும் அளவு தங்கம் கடத்தப்படுவதாக கிடைத்துள்ள தகவல்கள் குறித்து பாதுகாப்புப் படையினர் விசாரணை ஆரம்பித்துள்ளனர்.

பாதுகாப்பு படையினர் இது தொடர்பாக தலைமன்னார் துறைமுக ஊழியர்கள் இருவரை கைது செய்திருக்கின்றனர் இவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான தங்கப் பாளங்கள் நகரில் உள்ள இரண்டு கடைகளில் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றன.

இவை இந்தியாவுக்கு கடத்தப்படுவதற்கே மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

இந்த கடத்தல் நடவடிக்கையை கண்டுபிடித்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கையாடினார் என்றும் சொல்லப்படுகிறது.

இவரை பாதுகாப்பு படையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர். (த-மு)

## சோமண்ணை



கடத்தலாலே போகப் பொருளான தங்கத்தை இழந்து போதைப் பொருளான ஹெரோயினைப் பெற்றுக் கொள்ளுகிறம் பாருங்கோ.

## வள்ளம் கவிழ்ந்தது இருவரை காணவில்லை

நீர்கொழும்பில் இருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற வள்ளம் ஒன்று கவிழ்ந்தது. இரண்டு மீனவர்கள் நீந்தித் தப்பினர். இருவர் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

காணாமல் போன இரண்டு மீனவர்களையும் வள்ளத்தையும் கடற்படையினர் தேடி வருகின்றனர். (த-மு)

# தங்க நகை உற்பத்தியாளர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்

## விரைவில் சட்டவரைவு வரும்

கொழும்பு, ஜூன் 5

தங்க நகை உற்பத்தியாளர்கள், தாம் உற்பத்தி செய்யும் நகைகள் சுத்தமானவை என்பதை நிரூபிக்க வேண்டும்.

இதனைக் கட்டாயப்படுத்தும் சட்ட விதிகள் விரைவில் அரசாங்கத்தால் இயற்றப்படும்.

தங்க நகை உற்பத்தியாளர்களைக் கட்டுப்படுத்தும் சட்ட விதிகள், அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபன சட்டத்தில் உள்ளடக்கப்படும்.

பாவனையாளர்கள் ஏமாற்றப்படாதிருக்கவும், சுத்தமான நகைகளை அவர்கள் வாங்குவதற்கு ஏதுவாகவுமே இவ்வித சட்ட விதிகள் இயற்றப்படவுள்ளன.

புதிய சட்டத்தின்படி, ஒவ்வொரு உற்பத்தியாளரும், தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட நகை சுத்தமானது என்பதை நிரூபிக்க வேண்டும்.

அதன் எண்ணை குறிப்பிட்டு, அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபன முத்திரை, உற்பத்தி ஆண்டு ஆகியவற்றை குறிக்க வேண்டும். (த—க)

# வெளிநாட்டு உதவிகளை நம்பி இருப்பதில் பயனில்லை

— றொனி!

கொழும்பு, ஜூன் 5

வெளிநாட்டு உதவிகளை நம்பிக் கொண்டு இருப்பதில் பயனில்லை. இன்றைய சூழ்நிலை இதற்குச் சாதகமாக இல்லை. இன்று போல் எதிர்காலத்திலும் எமக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்குமா என்பதில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. றொனி டி மெல் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் பணவீக்கம் 20 சத வீதத்தை அண்டி நிற்கிறது. அது குறையாவிட்டால், பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

எமது உள்நாட்டு மூலவளத்தாலும், சொந்த விடா முயற்சியாலுமே இந்த நெருக்கடியை நாம் சமாளிக்க வேண்டும்.

தேயிலையின் விலையும் தொடர்ந்து இன்று போல் இருக்கும் என்று நம்ப முடியாது. அது எந்த நேரமும் குறைந்து விடலாம்.

இவ்வாறு அவர் கூறினார். (க)

## நோன்பு தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.17 |
| ஸுபுஹு | — காலை | 4.33 |
| சூரிய உதயம் | — காலை | 5.53 |
| ழுஹர், | — பகல் | 12.20 |
| அஸர், | — பி.பகல் | 3.36 |
| மஃரிபு | — மாலை | 6.25 |
| இஷா | — இரவு | 7.45 |

# கனிப்பொருள் வளங்களை கண்டுபிடிக்க

## ஐ. நா. உதவியுடன் ஆய்வு

கொழும்பு, ஜூன் 5

இலங்கையில் இவ்வருட இறுதியில் புவியியல் தொடர்பான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும்.

கனிப் பொருள்கள், இரத்தினக் கற்கள் ஆகியவை இருக்கும் இடங்களை கண்டுபிடிப்பதற்கே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

உலக வங்கி ஐ. நா. கடன் நிதியம் ஆகியவை இதற்காக 40 லட்சம் டாலர் நிதியை வழங்குகின்றன. (த-ந)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# சைப்ரஸ் கப்பல்களில் இலங்கையருக்கு வேலை வாய்ப்பு

## இரு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானது

கொழும்பு, ஜூன் 5

சைப்ரஸ் நாட்டுடன் இலங்கை கப்பற்துறை ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறது.

இந்த இரு தரப்பு உடன்படிக்கை மூலம், சைப்ரஸ் நாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கப்பல்களில், ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தொழில் வாய்ப்புப் பெற முடியும்.

750க்கும் அதிகமான கப்பல்கள் சைப்ரசில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் சைப்ரசில் 2000 கப்பற் தொழிலாளர்களே – மாலுமிகள் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த மாலுமிகள் பற்றுக்குறையை நீக்க இந்த இரு தரப்பு உடன்படிக்கை உதவுவதோடு,

பற்றுக்குறையை நிவர்த்தி செய்யக்கூடியளவு, இலங்கையில் உள்ளோர். இதன் மூலம் தொழில்வாய்ப்பும் பெற முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வர்த்தக கப்பற்துறை அமைச்சு செய்து கொண்ட இந்த உடன்படிக்கை விரைவில் செயற்பாட்டுக்கு வரும் என்று, வர்த்தக கப்பற்துறைப் பணிப்பாளர் திரு. டேவிட் சொய்சா தெரிவித்தார்

(எ—8)

## பயங்கரவாத...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் எங்கிருந்தும் உதவி பெறத் தயாராக இருக்கின்றனர்.

அரபு நாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் தமது தொழில்களை இழக்க வேண்டிவருமெனவும் பயம் காட்டுகின்றனர்.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, எகிப்து ஆகிய நாடுகளில் இஸ்ரவேல் தூதரகங்கள் இயங்குகின்றன. அதே சமயம் அந் நாட்டவர்கள் பெருமளவில் மத்திய கிழக்கு அரபு நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

ஆனபடியால் இதுபற்றி எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இலங்கையருக்கு அங்கு வேலைவாய்ப்புகள் கூடுமே ஒழிய குறைய மாட்டாது.

எமது தேயிலை ஏற்றுமதியும் பாதிக்கப்பட மாட்டாது. சிறந்த ரக தேயிலை என்பதால்தான், இலங்கைத் தேயிலையை அரபு நாடுகள் விரும்பி வாங்குகின்றன. அரசியல் காரணங்களுக்காக அல்ல.

அந்தரங்க நோக்கம் ஒன்றுடன்தான் எதிர்க்கட்சியினர் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். முஸ்லிம் மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்ல அவர்கள் முயல்கின்றனர்.

முஸ்லிம்கள் கொண்டுள்ள சந்தேகம் நியாயமானதே. அந்தச் சந்தேகத்தை எம்மால் நீக்க முடியும்.

1983 ஜூலை மாத கலவரம் போன்று மீண்டும் நடைபெறக் கூடாது.

பொதுமக்கள் சாதுரியமாகவும், உறுதியாகவும், பொறுமையுடனும் இருக்க வேண்டும். எம்மால் மாயா ஜாலம் காட்ட முடியாது. ஆனால் திட்டமிட்டு எமது கடமையை நிறைவேற்றுவோம்.

இவ்வாறு திரு. லலித் அத்துலத் முதலி கூறினார்.

காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா பேசியதாவது:—

இந்திய இராணுவ பலத்துடன் ஒப்பிடும் போது எமது இராணுவம் மிகவும் சிறியது. அமைதி காக்கவே எமது இரா...

முற்படுகின்றன. இச் சந்தர்ப்பத்தில் எம்மைப் பாதுகாக்கக் கூடியவர்களை நாம் கண்டறிய வேண்டும்.

இஸ்ரவேலுக்கு நாம் தூதரகம் அமைக்க அனுமதி வழங்கவில்லை. நலன்காப்புப் பிரிவு அமைக்கவே அனுமதித்திருக்கிறோம்.

எமது இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்கவே இஸ்ரவேலரை அழைத்துள்ளோம். சிங்கப்பூர் இராணுவத்துக்கும் இஸ்ரவேலர்கள்தான் பயிற்சி அளிக்கிறார்கள். அப்படியானால் நாம் செய்வதில் என்ன பிழை?

இவ்வாறு திரு. காமினி திசாநாயக்கா கேட்டார்.

(த– க)

# இரத்தினக்கல் கொள்ளை: ஒருவர் கைதானார்

கொழும்பு, ஜூன் 5

கொழும்பு, கறுவாக்காடு, கில்பட் சந்திரவங்க மாவத்தையில் வசிக்கும் இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலிருந்து, களவாடப்பட்ட லட்சக் கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த இரத்தினக் கற்களையும், ஒரு தொகை தங்க நகைகளையும் கறுவாக்காட்டுப் பொலீஸார் கைப்பற்றியமை தெரிந்ததே.


இது தொடர்பாக கறுவாக்காட்டுப் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்திருக்கின்றனர்.

பொலீஸார் கைப்பற்றிய இரத்தினக் கற்களினதும், தங்க நகைகளினதும் பெறுமதி எவ்வளவு என்று இதுவரை கணக்கிடப்படவில்லை என்று பொலீஸார் அறிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபர், இரத்தினக்கல் வியாபாரியின் வீட்டில் காவல் வேலை செய்தவர் என்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்திருக்கிறது.

வர்த்தகரின் வீட்டிலிருந்த இரும்புப் பெட்டியின் சாவி ஏற்கனவே திருடப்பட்டிருக்கலாம் எனவும், பின்னர் வர்த்தகர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து பெட்டியைத் திறந்து மேற்படி இரத்தினக் கற்களையும், நகைகளையும் திருடியிருக்கலாம் என பொலீஸார் கருதுகின்றனர்.

(எ—11)



அரசாங்க அதிபர்களின் வருடாந்த மாநாடு, நேற்றுக்காலை, இலங்கை மத்திய வங்கி மண்டபத்தில் ஆரம்பமானது. நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் உரை ஆற்றுவதையும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், காணி காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(த—ச)

## பெற்ரோலியம் எண்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

...ப்பது அந்த நாட்டுக்கு (இஸ்ரவேலுக்கு) உற்சாக மூட்டுவதாகவே அமையும் என்று அந்தப் பேச்சாளர் இலங்கையைக் குறை கூறினர்.

பெற்ரோலியம் எண்ணெய் விஷயத்தில் ரஷ்ய நிலைமையைத் தெளிவுபடுத்தி இலங்கையில் உள்ள சோவியத் ரஷ்யத் தூதரகம் பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.–

வர்த்தக, கப்பற்றுறை அமைச்சைச் சேர்ந்த இலங்கைத் தூது கோஷ்டி ஒன்று அண்மையில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்தது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவர் ஜனுப் ஆர். சருக், பெற்ரோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. தஹம் விமலசேன ஆகியோர், ரஷ்யாவிடமிருந்து பொருள்களைக் கூடுதலான அளவில் இறக்குமதி செய்வது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இன்றைய நிலையில், இலங்கைக்குத் தேவையான டீசல், மசகு எண்ணெய் வகைகளை வழங்க ரஷ்யாவால் இயலாது என சுட்டிக் காட்டப்பட்டது. முடியுமானால் இந்த வருடக் கடைசியில் அல்லது அடுத்த வருடத்தில், இதுபற்றி ஆலோசிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக, கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் திரு. லக்ஷ்மன் டீ மெல் தலைமையில் வந்த இலங்கைக் குழு, ரஷ்யாவின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ஐ. ரி. கிரிஷின்னுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

சிநேகபூர்வமாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பண்டமாற்று வர்த்தகத்தை அதிகரிப்பது பற்றி கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்றன.

1982 ஆம் ஆண்டை விட 1983 ஆம் ஆண்டில், ரஷ்யாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி ...

## தமிழ் மக்களின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமிர்தலிங்கம் திறந்து வைத்தார்.

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அதி. வண. யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை, முன்னாள் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், அதி. வண. ஆயர் அம்பல...

அழிக்க முற்பட்டார்களோ, அவர்களே அந்த நினைவுச் சின்னங்களுக்கு காவல் காக்க வேண்டியவர்கள் ஆனார்கள்.

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி 97 ஆயிரம் நூல்கள் அடங்கிய நூலகத்தை ஒரு இதழ்தானும் மிஞ்சாது தகனம் செய்தனர்.

# பௌத்த சித்தாந்த அடிப்படையிலேயே எம் வெளிநாட்டு கொள்கை

சுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அதி. வண. யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை, முன்னாள் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், அதி. வண. ஆயர் அம்பலவாணர்,

அதி. வண. ஆயர் குலேந்திரன், அல்ஹாஜ் மீரான் மொகிதீன் ஆலிம், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், குழு சிரேஷ்ட உறுப்பினர் திரு. கு. நேசையா, ஆகியோர் மேடையில் அமர்ந்திருந்தனர்.

சங்கீத பூசணம் பொன். சுந்தரலிங்கம் தமிழ்த் தாய் வணக்கம் பாடினார்.

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அதி. வண. யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை, அல்ஹாஜ் மீரான் மொகிதீன் ஆலிம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

திரு. அமிர்தலிங்கம் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

எமது எதிர்காலத்து நம்பிக்கைச் சின்னம் இந்த நூலகம். மீண்டும் இது கட்டப்பட்டது எமது வருங் காலத்தை உறுதியுடன் அமைக்கும் சின்னமாகவும், இறை நம்பிக்கைச் சின்னமாகவும் அமையும்.

பல நெருக்கடிகளின் மத்தியிலும் எமது தமிழ் மக்கள் உறுதியோடு இருக்கிறார்கள் என்பதனை யாழ். நூலகம் எடுத்துக் காட்டுகிறது.

யாழ். நூலகம் தமிழ் மக்கள் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த ஒன்று. எமது நூலகத்தை எரித்தால் அதன் மூலம் எமது இனத்தையும், அதன் வாழ்வையும் அழித்து விடலாம் எனச் சிலர் நினைத்தார்கள். அது நடக்கவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனின் மணி விழாவில் கலந்து கொண்டேன். "74 ஆம் ஆண்டு அநியாயமாகப் பலியான 9 பேரின் நினைவுச் சின்னங்கள் ஒரு தடவை அல்ல, இரு தடவைகள் அல்ல, மூன்று தடவைகள் உடைத்து நொறுக்கப்பட்டன" என்று அப்போது கூறினேன்.

யாரந்த நினைவுச் சின்னங்களை


**இரத்தினபுரி**

பண்டாரநாயக்க
மாவத்தையில்
60 பேர்ச்சஸ் த
காணியுடன்

**விசாலமான வீடு
விற்பனைக்குண்டு**

வீரசிறி,
280/1, பராக்கிரம மாவத்தை,
பேலியகொடை.
தொலைபேசி:- 521044


1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி 97 ஆயிரம் நூல்கள் அடங்கிய நூலகத்தை ஒரு இதழ்தானும் மிஞ்சாது தகனம் செய்தனர்.

நூலகத்தைக் கட்டியெழுப்ப தமது உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணம் செய்த அறிஞர்கள் பலர் உள்ளனர்.

இந்த நூலகம் எரிகிறதெனக் கேள்விப்பட்டதும் வணக்கத்திற்குரிய தாவீது அடிகளார் உயிரையே விட்டார்.

இப்படியான வரலாறு படைத்த நூலகத்தை மீண்டும் எரிக்க மாட்டார்களா? எனச் சிலர் கேட்டனர். இனியும் அவர்கள் அப்படி எரிக்கத் துணிய மாட்டார்கள் என்பதே எனது பதில்.

[பலத்த கரகோஷம்]

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட லயனல் பெர்ணண்டோ குழு இந்த நூலகத்திற்கு ஒரு கோடி ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு சிபார்சு செய்தது. ஏனைய தனி நபர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கும் 1 கோடி 20 லட்சம் வழங்கவும் குழு சிபார்சு செய்தது.

தனி நபர்களுக்கு அரசாங்கம் 1 கோடி 20 லட்சத்தை வழங்கி விட்டது.

இந்த நூலகத்திற்கு ஜனாதிபதி நிதியிலிருந்து 20 லட்சம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது. நூலகத்திற்குரிய முழுத் தொகையும் இன்னும் கொடுக்கப்படவில்லை.

மிகுதி 80 லட்சம் ரூபாவுக்கு நூல்கள் வழங்குவதாகக் கூறப்பட்டது. ஜனாதிபதி தமது பல வாக்குறுதிகளை நிறைவேற்றாது இருந்தாலும், எனக்கு அளித்த இந்த வாக்குறுதியையாவது நிறைவேற்ற வேண்டும்.

எரிந்த நூலகத்தின் சிறுவர் பகுதியை நினைவுச் சின்னமாக வைத்திருக்க வேண்டுமென பலர் விருப்பம் தெரிவித்திருப்பதாக இங்கு கூறப்பட்டது.

யாழ். நகரம் முழுவதுமே நினைவுச் சின்னமாக மாறி வருகிறது. இந்த நூலகத்தின் குறிப்பிட்ட பிரிவைப் புகைப்படமாக எடுத்து இங்கு தொங்க விடப்பட வேண்டும்.

தமிழகத்தினால் வழங்கப்பட்டிருந்த 5 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை இங்கு கையளிப்பதற்கு இந்தியத் தூதுவர் நேரடியாக இங்கு வருகை தர இருந்தார். ஆனால், பாரதப் பிரதமரின் முக்கிய கடிதம் ஒன்றை ஜனாதிபதியிடம் ஒப்படைக்க வேண்டி இருந்ததால் அவர் இங்கு வரவில்லை.

நான் தமிழகத்தில் இருக்கும் போது திரு. நெடுமாறன் உட்பட பலர் பல்லாயிரக் கணக்கான புத்தகங்களைத் திரட்டி வைத்திருப்பதாக என்னிடம் தெரிவித்தனர். அவற்றையெல்லாம் ஆணையாளர் தமிழகம்

மாறல்கள் நடைபெற்றன.

1982 ஆம் ஆண்டை விட 1983 ஆம் ஆண்டில், ரஷ்யாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி இரட்டிப்பாக இருந்தது. இலங்கையின் நட்பரை கூடுதலாக ரஷ்யாவே கொள்வனவு செய்கிறது.

உலோகப் பொருள்களை வெட்டும் இயந்திரங்கள், சிறு ஆயுதங்கள், தேயிலைப் பெட்டி உபகரணங்கள், மருந்துகள், உர வகைகள், சிமெந்து, ஜன்னல் கண்ணாடி போன்றவற்றை ரஷ்யா, இலங்கைக்கு கூடுதலாக ஏற்றுமதி செய்தது.

ரஷ்யாவின் தகுதிக்கும் இலங்கையின் பொருளாதார நிலைக்கும் ஏற்ப, ரஷ்யாவின் ஏற்றுமதி அமையவில்லை எனவும் எடுத்துக் கூறப்பட்டது.

ரஷ்ய வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களுடன் ஜனுப் சருக் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளை அடுத்து, 1984 – 85 இல் 50,000 வீடுகளுக்கான மின்சார மீட்டர்களை கூ. மொ. வி. நிறுவனத்துக்கு வழங்க இணக்கம் காணப்பட்டது.

அத்துடன் ஒரு தொகை டின் மீன் வகைகளும் அங்கிருந்து ஏற்றுமதியாகும்.

இந்திய இராணுவ ... எமது டன் ஒப்பிடும் போது எமது இராணுவம் மிகவும் சிறியது. அமைதி காக்கவே எமது இராணுவம் அமைக்கப்பட்டது. அது 15,000 வீரர்களைக் கொண்டது.

சில சக்திகள் எம்மைத் தாக்க

## யுவதிகளுக்கு விசேட பயிற்சி

புங்குடுதீவு, ஜூன் 4

புங்குடுதீவில் 60 யுவதிகளுக்கு சுயதொழிலில் ஈடுபடுவதற்கான விசேட பயிற்சி அளிக்கப்படும்.

சுவீடிஷ் அபிவிருத்தி நிறுவனத்தின் ஆதரவுடன் இலங்கை மகளிர் பணியகம் இப் பயிற்சி நெறியை நடத்தவிருக்கிறது.

புங்குடுதீவு, நயினாதீவைச் சேர்ந்த யுவதிகளே இதற்குத் தெரிவு பெற்றிருக்கின்றனர்.

இவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் தினசரி 10 ரூபா வீதம் வழங்கப்படும் என்றும், பயிற்சி முடிவில் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு உதவியாக 1,500 ரூபா வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(எ– 246)

## அபிவிருத்தி பணி மேற்கொள்ள நிதி

கண்டி, ஜூன் 4

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த பதினைந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பாதைகள் சீரமைப்பு, வாய்க்கால்கள் நிறுவுதல் போன்ற வேலைகளுக்காக 12 லட்சத்து 76,000 ரூபா செலவிடப்பட இருக்கிறது.

அரம்பேகட, பரிகமடு புசல்லாவை, மாரஸ்ஸன, முதுனேகட, நாவலப்பிட்டி போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள இடங்களில் பொது அபிவிருத்தித் திட்டத்தின் பொருட்டு இந்தப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

(எ– 105)

சென்று பொறுப்பேற்க வேண்டும்.

"உலகமே எங்கள் பக்கம்; ஏனெனில் நீதி எங்கள் பக்கம். நாம் எதற்கும் அஞ்சத் தேவை இல்லை."

இதைத்தான் நான் இந்தக் கூட்டத்தில் நின்று கூற விரும்புகிறேன். வேறெதையும் நான் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் நான் கட்டுமீறிப் பேசிவிடுவேன்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் தலைமை உரையையும் நன்றி உரையையும் நிகழ்த்தினார்.

(உ– கூ– 120)

# எம் வெளிநாட்டுக் கொள்கை

## மொரட்டுவைக் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 5

இலங்கையை சோஷலிசம், கம்யூனிஸம், முதலாளித்துவம் போன்றவற்றின் அடிப்படையிலான ஆட்சி முறையினைக்கு உட்படுத்துவது எமது நோக்கமல்ல.

சிறந்த புத்த மதக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஜனநாயக ஆட்சியை நடத்துவதே எமது லட்சியமாகும்.

இத்தகைய கொள்கையை நான் என்றுமே கைவிட மாட்டேன்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஞாயிறன்று மொரட்டுவையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தமது ஜப்பான் நாட்டு விஜயத்தைப் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த நாட்டைப் போல் நமது நாட்டையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

ஜனநாயக ஆட்சி முறையே முழு உலகிற்கும் சிறந்ததொரு அரசியல் முறை என்பதை எனது வெளிநாட்டு விஜயத்தின் போது என்னால் உணர முடிந்தது.

ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையிலேயே இன்று நாம் செயற்பட்டு வருகின்றோம். நம் நாட்டு மக்கள் ஜனநாயக ஆட்சி முறை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

எனவே கம்யூனிசம், முதலாளித்துவம், சோஷலிஸம் என்பன நம்நாட்டுக்குத் தேவைப்படாத ஒன்றாகும். ஜனநாயகத்தைத் தவிர்ந்த வேறெந்த ஆட்சி முறையும் நம் நாட்டுக்குப் பொருத்தமற்றதாகும்.

பௌத்த சித்தாந்தத்தின் அடிப்படையில் செயற்படும் நாம் அதைத் தவிர வேறெந்த சித்தாந்தத்திற்கும் அடிமையாகக் கூடாது.

பௌத்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே நாம் எமது வெளிநாட்டு உறவுகளையும் வைத்திருக்கிறோம். அத்துடன் நாம் எமது கொள்கைகளை யதார்த்த அடிப்படையில் வகுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று ஜப்பான் நாட்டின் துரித முன்னேற்றத்திற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் அயராத உழைப்பாகும்.

இதைப் போல நம் நாட்டையும் துரித கெதியில் முன்னேற்ற நம் மக்களால் நிச்சயம் முடியும்.

சர்வதேச நாடுகளில் கையாளப்படுவதைப் போல எமது நாட்டிலும் சில பொறுப்புக்கள் தனியாரின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

தனியார் துறையின் உதவியின்றி ஒரு நாடு முழுமையாக முன்னேற்றமடைய முடியாதென்பதே இதற்குக் காரணமாகும்.

பொருளாதாரப் பிரச்சினைகளால் எமது நாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் பல இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் வெளிநாட்டு உதவியுடன் நம் நாட்டில் பல தொழில் நிறுவனங்களை நிறுவி நம் நாட்டை முன்னேற்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

இக் கூட்டத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, திரு. லலித் அத்துலத் முதலி, திரு. காமினி திசாநாயக்கா, அல்ஹாஜ் எம். எச். முஹம்மது, கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், திரு. வீரசிங்க மல்லிமாராச்சி, திரு. டிரோன் பெர்ணண்டோ ஆகியோரும் உரையாற்றினர்.

(எ–ர)

## புனித ரமழான் சிந்தனைகள்

புனித மிகு ரமழான் நோன்பு மாதத்தில் முன்சென்ற எந்த "உம்மத்" துக்கும் கொடுக்கப்படாத ஐந்து பாக்கியங்கள் என்னுடைய உம்மத்துமார்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

நபி மணி முஹம்மது (ஸல்) அவர்கள் இவ்வாறு நோன்பின் மாண்பை அறிவித்தார்கள். அந்த ஐந்து பாக்கியங்கள் என்னவென்று பார்க்கும் நான் ரமழான் மாதம் முழுதும் நோன்பு நோற்பதன் மகிமையை உணர்கிறோம்.

★ நோன்பாளியின் வாய் வாடை அல்லாஹ் விடத்தில் கஸ்தூரி மணத்தைக் காட்டிலும் நறுமணம் உள்ளதாக இருக்கும்.

★ நோன்பாளியின் நோன்பு திறக்கும் நேரம்வரை அவர்களுடைய பாவங்களை மன்னித்து அருளுமாறு (அல்லாஹ் விடத்தில்) சமுத்திரத்தில் வாழும் மீன்கள் வரையிலும் பிரார்த்தித்துக் கொண்டு இருக்கின்றன.

★ அல்லாஹுத்த ஆலா நோன்பாளிக்காக சுவர்க்கத்தை அனுதினமும் அலங்கரிக்கச் செய்து அந்தச் சுவர்க்கத்தை நோக்கி என்னுடைய நல்லடியார்கள் (உலகில்) தமக்குச் சம்பவிக்கும் சிரமங்களை வீசி எறிந்து விட்டு வெகு சீக்கிரத்தில் என்னிடம் வந்து சேருவார்கள் எனக் கூறுகிறான்.

★ இந்த மாதத்தில் அக்கிரமம் செய்யும் ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகிறது.

அவை ரமழான் அல்லாத மாதத்தில் எந்தெந்த தீமைகளில் பிரவேசித்தனவோ, அந்தத் தீமைகளில் எல்லாம் இந்த மாசத்தில் பிரவேசிப்பதில்லை.

★ ரமழான் கடைசி இரவில் நோன்பாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்படுகிறது.

அவ்வாறு மன்னிக்கப்படும் இரவு "லைலத்துல் கத்ர்" இரவா? என்று சஹாபாத் தோழர்கள் வினவினர்.

அதற்கு முஹம்மது! நபி (ஸல்) அவர்கள் "கூலிக்காரனுக்கு வேலை முடிந்தவுடன் கூலி கொடுப்பது தான் வழக்கம்"– என்றார்கள்.

ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு உபதேசம் செய்தார்கள். இதனை ஹஸரத் உப்பாதா இப்னு ஸாமித் (ரலி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ரமழான் நம்மை வந்தடைந்துள்ளது. அது அபிவிருத்திகள் நிறைந்த மாதம்.

அம்மாதத்தில் அல்லாஹுத்த ஆலா உங்கள் பால் சிறப்பாகக் கவனம் செலுத்தி தன் அருள் மழையை வருஷிக்கச் செய்கிறான்.

பிரார்த்தனைகளை அங்கீகரித்துக் கொள்கிறான். நல்ல கைங்கரியங்களில் உங்களுக்கிடையில் போட்டியிட்டு முன்னேறுபவர் யார்? என்பதை அவன் கவனிக்கிறான்.

உங்களைப் பற்றி அவன் மலக்குகளிடம் பிரஸ்தாபித்து பெருமை பாராட்டுகிறான். ஆகவே நீங்கள் நன்மையான கைங்கரியங்களைப் புரிந்து அல்லாஹ்விடம் சமர்ப்பியுங்கள்.

இப்புனித மாதத்தில் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை – அனுக்கிரஹத்தை – அடையாமல் அப்புறப்பட்டு இருப்பவன் துர்ப்பாக்கியவான் ஆவான்.

இந்தக் கருத்தையும் நினைவிற் கொண்டு ரமழானில் அபிவிருத்தியைப் பெற ஆவன செய்வோம். அல்ஹம்துலில்லாஹ்.

(7)

— எப். எம். பைரூஸ்.

## பயிற்சி நிலையம்

பேசாலை, ஜூன் 4

தலைமன்னார் கிராமோதய சபை பிரிவில் இரு பனம் பொருள் பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இவற்றை பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. நடராஜா திறந்து வைத்தார்.

(ஜூ–251)

# ஓமான் நாட்டுக்கு 40 டாக்டர்கள்

## வேலை பெற்று செல்வதால் சுகாதார சேவை பாதிப்பு

கொழும்பு, ஜூன் 5

இலங்கையில் இருந்து 40 டாக்டர்களும், 60 தாதிமார்களும் ஓமான் நாட்டில் வேலைவாய்ப்புப் பெற்று அடுத்த வாரம் பயணமாக இருக்கிறார்கள். இவர்களின் வெளியேற்றத்தால் சுகாதார சேவை பெரிதும் பாதிக்படக் கூடும்.

ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார நிறுவனங்களின் மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பிய அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இருந்து ஏராளமாக டாக்டர்கள் தொழில் புரிவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். இதனால் நம் நாட்டு வைத்திய சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தமது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு கடந்த ஜூலை மாதம் நாடு திரும்ப வேண்டியவர்கள் இன்னும் நாடு திரும்பவில்லை.

இலங்கையிலிருந்து செல்பவர்கள் வெளிநாடுகளில் சாதாரண, தற்காலிக டாக்டர்களாகவே கடமை புரிகிறார்கள். தாதிகளுக்கு வேறு தொழில்களே வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் கொழும்பில் கடமையாற்றும் தாதிமார்கள், யாழ்ப்பாணப் பகுதிகளுக்கும், ஏனைய கஷ்டப் பிரதேசங்களுக்கும் செல்ல மறுக்கின்றனர்.

இதன் காரணமாகவே இப்பகுதியில் வைத்திய சேவைகள் மிகப் பின்தங்கிய நிலையிலிருக்கின்றன.

இந் நிலையை தவிர்ப்பதற்கு கூடிய விரைவில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இவ்வாறு அமைச்சர் கூறினார். (ல—ர)



தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் கீழ் வரும் திகன மகாவெரித்தன்னை மத்திய கால்நடைப் பண்ணையை, கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் திறந்து வைத்து உரையாற்றுவதையும், அமைச்சர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம். (ல—ங)

[படம்: கிங்ஸ்லி எஸ். செல்லையா]

## மலையக தொழிலாளர்களின் சம்பள உயர்வை நிர்ணயிக்க அறிக்கை

கொழும்பு, ஜூன் 5

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி தனித் தனியான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி, தோட்டத் துறை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கேட்கப் பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கான முத்தரப்புக் குழு...

...கோன், இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான், உப தலைவர் திரு. ஜெயா பெரிசுந்தரம் — இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ராஜா செனவிரத்ன, தொழிலுறவு இயக்குநர் திரு. எஸ். இராஜமாணிக்கம் ஆகியோரும் — மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. பெம்...

...சில்வா. பொதுச் செயலாளர் திரு. எஸ். சிவசாமி ஆகியோரும் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இப்பொழுது தோட்டத் தொழிலாளர்களைத் தவிர்ந்த ஏனைய தொழிலாளர்களும் சாதாரண அடிப்படை சம்பளம், வாழ்க்கைப்படி, நியாயமான சம்பளம் என மூன்று அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சாதாரண அடிப்படை சம்பளம் மட்டுமே வழங்கப்படுகிறது. தோட்டத் ...

## சந்தேக நபர்கள் பொலிஸில் சரண்

கிளிநொச்சி, ஜூன் 4

புளியம்பொக்கணைப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் கொலையுண்ட மாரிமுத்து ...

## நடிகையை காதலிக்கவில்லை நடிகர் சுரேஷ் கூறுகிறார்

ஆஜானுபாகுவான தோற்றம் சிவந்த நிறம், சுறுசுறுப்பான நடவடிக்கை, சிரித்து சிரித்து பேசும் குணம் இவைகளுக்கு சொந்தக்காரர் இளம் நடிகர் சுரேஷ்.

வயது 22. கல்லூரியில் படித்து சினிமா உலகில் துணை டைரக்டராக காலடி வைத்து இளம் முன்னணி கதாநாயகர்களில் ஒருவராக உயர்ந்திருப்பவர்.

"பன்னீர் புஷ்பங்கள்" படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகி 4 ஆண்டுகளில் 26 தமிழ்ப் படங்கள் உட்பட 7 தெலுங்கு, ஒரு கன்னடப் படங்களிலும் நடித்தவர். இப்போது நடிக்கும் படங்கள் ஒரு டஜனுக்கும் அதிகம்.

சுரேஷின் தந்தை கோபிநாத். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என 29 படங்களை டைரக்டு செய்ததுடன் 18 சொந்தப் படங்களும் தயாரித்த பட அதிபர்.

தந்தையின் கண்காணிப்பில் திரை உலகம் பற்றி புரிந்து, அறிந்து நடித்து வரும் சுரேஷ், அவருடைய பெற்றோருக்கு ஒரே பிள்ளை. செல்லப்பிள்ளை.

சுரேஷை பேட்டி கண்டபோது அவர் தெரிவித்ததாவது:

கேள்வி: உங்கள் உடல் வசீகரத்தின் ரகசியம் என்ன?

சுரேஷ்: முக்கிய காரணம் உடற்பயிற்சி, குதிரை ஏற்றம், நீச்சல், வாள் வீச்சு, சிலம்பம், "கராத்தே" நடனப் பயிற்சி என பலவித பயிற்சிகளை பெற்றேன். மேலும் பெற்று வருகிறேன். உடல் வாகு சீராக இருப்பதற்கு இவைகள் போதுமே!

கேள்வி: சினிமா உலகில் நீங்கள் கற்றுக் கொண்ட பாடம் என்ன?

பதில்: முதலில் நடிப்புத் திறமை வேண்டும். அதை வளர்த்துக் கொள்ள முயற்சி தேவை. இதற்கு மேலாக நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க



சுரேஷ்

வேண்டும். இல்லை என்றால் நடிப்பிருந்தும் பயனில்லை. ஆள் பாதி, ஆடை பாதி என்பார்கள். "டிப்டாப்" ஆக உடை அணிய விரும்புகிறேன்.

கேள்வி: உங்கள் முதல் ரசிகர் யார்?

பதில்: எனது தந்தைதான். எனது தாயார் எந்தப் படம் பார்த்தாலும் நன்றாக இருக்கிறது. என்பார். தந்தையோ என் தரப்பில் குற்றம் குறையை சொல்லி உற்சாக மூட்டுவார். நான் எந்த வேடத்திலும் நடித்து "ஆல் ரவுண்டர்" என்ற பெயர் பெற வேண்டும்.

என்னைக் கவர்ந்த நடிகையோ வேறு பெண்ணோ இதுவரை யாரும் இல்லை. ஆனால் நான் என் விருப்பப்படி திருமணம் செய்ய பெற்றோர் எந்தத் தடையும் விதிக்க மாட்டார்கள். மணந்தால் குடும்ப பெண்ணாகவே இருக்கலாம்.!

இப்போது சுரேஷின் தந்தை டைரக்டர் கோபிநாத் குறுக்கிட்டு கூறியதாவது:—

பல ஆண்டுகளாக ஆண்டுக்கு 3 அல்லது 4 படங்களை தயாரித்தும், டைரக்ட் செய்தும் வந்தேன். சுரேஷ் நடிகர் ஆனதில் இருந்து டைரக்ஷன் பொறுப்பை விட்டு விட்டேன். அவனுக்கு துணையாக நிற்க வேண்டியதே என் கடமை. ராமநாராயணன், கங்கை அமரன் மற்றும் அவனுக்கு ஆதரவு காட்டிய அனைவரிடமும் மிகுந்த மரியாதை கொண்டவன் சுரேஷ்.

யாருக்காவது உதவ வேண்டும் என்றால் படத் தயாரிப்பில் ஈடுபடுவேன்.

கண்ணாடி முன் நின்று நடித்து நடித்து சுரேஷ் பழக வேண்டும். காலை 9 மணிக்கு படப்பிடிப்பு என்றால் அதற்கு முன்பே சென்று விட வேண்டும். அங்கு எந்த வசதியையும் எதிர்பார்க்கக் கூடாது! இவைகளே அவனுக்கு நான் இட்ட அன்புக் கட்டளைகள்.

இவ்வாறு கூறினார் கோபிநாத். (ஜ—10)

## கவர்ச்சி ஆட்டக்காரி சங்கீதா

அந்த அரங்கின் நடுவே சுழலும் கண்ணாடிக் கூண்டு. அதன் உள்ளே இடைக்கு கீழே ஒரு கச்சை, மேலே ஒரு கச்சை கட்டி படு "கவர்ச்சி"யுடன் ஆடிக் கொண்டிருந்தார். ஒரு ஆட்டக்காரி.

இவர்தான் "திடம்", "ஆறிலிருந்து அறுபதுவரை", "நெஞ் ...



புளியம்பொக்கணைப் பகு தியில் அண்மையில் ஏற் பட்ட கோஷ்டி மோதலில் கொலையுண்ட மாரிமுத்து என்பவரின் கொலை தொடர் பான சந்தேக நபர்கள் கிளிநொச்சி பொலீஸில் சரணடைந்தனர்.

மேற்படி கொலை தொடர் பான சந்தேக நபர்களைக் கைது செய்ய கிளிநொச்சி பொலீஸார் தீவிர தேடுதல் நடத்தி வந்த னர்.

பொலீஸார் இவர்களை கிளி நொச்சி நீதிமன்றத்தில் நீதிபதி கே. கதிரவேற்பிள்ளை முன் ஆஜர் செய்தனர்.

இவர்களை விளக்கமறிய லில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டிருக்கிறார்.

(ல–244)

பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர் களுக்கு சம்பள உயர்வு வழங்கு வதற்கான முத்தரப்புக் குழு, கடந்த செவ்வாய்க்கிழமை தொழில் அமைச்சில் கூடியது.

தொழில் அமைச்சர் காப் டன் சி. பி. ஜே. செனவிரத்ன குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

இக்குழுக் கூட்டத்தில் தொழில் ஆணையாளர் சமர்ப் பித்த அறிக்கையை பரிசீலித்த தொழிற் சங்கப் பிரதிநிதிகள் அதனை வன்மையாக எதிர்த்த னர்.

ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஜனாப் மரிக்கார், தொழில் அமைச்சின் செயலா ளர் திரு. தஸநாயக்க, தொழில் ஆணையாளர் திரு. ஜீ. வீரக் கும் ஆகியோரும் —

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. பெம் சித் செனவிரத்ன, அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத் தின் தலைவர் திரு. ரஞ்சன் விஜே ரத்ன, லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி.

களுக்கு சாதாரண அடிப்படை சம்பளம் மட்டுமே வழங்கப் படுகிறது. தோட்டத் தொழி லாளர்களுக்கு வாழ்க்கைச் செலவு அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என் பதே தொழிற் சங்கங்களின் கோரிக்கையாகும்.

(ண–ய)

# நிதி ஒதுக்கீடு இல்லாததால் அபிவிருத்தியில் ஈடுபட முடியவில்லை

## அபி. சபை உறுப்பினர் கவலை

நிந்தவூர், ஜூன் 4

"எமது மாவட்ட அபிவி ருத்திக்கான நிதியில், அபி விருத்தி சபையின் தெரிவு வழி உறுப்பினர்களான எமக்கு ஒதுக்கீடுகள் செய்து தரப்படவில்லை. இதனால் எங்களால் அபிவி ருத்தி வேலைகளைச் செய்ய முடியாத நிலை இருந்து வருகின்றது."

அம்பாறை மாவட்ட அபி விருத்தி சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய உறுப்பினர் திரு. இ. விநயக மூர்த்தி மேற்கண்டவாறு கவலை தெரிவித்தார்.

அபிவிருத்தி சபைத் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம். எச். எம். ஜௌபர் தலைமையில், அம்பாறைக் கச்சேரியில் அண் மையில் இக் கூட்டம் நடை பெற்றது.

மின்சக்தி, எரி பொருள் பதில் அமைச்சரும், அம்பாறை மாவட்ட அமைச்சருமான திரு. பீ. தயாரத்ன, பிரதி தபால் தந்தித் தொடர்புகள் அமைச் சரும், சம்மாந்துறை எம். பியு மான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீது, முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனை எம். பீ. ஜனாப் ஏ. ஆர். மன்சூர், மட்டக்களப்பு மாவட்ட அமைச் சரும், பொத்துவில் இரண்டா வது எம். பியுமான திருமதி ரங்கநாயகி பத்மநாதன், பொத்துவில் முதலாவது எம். பி. ஜனாப் எம். ஐ. உதுமா லெவ்வை ஆகியோர் கூட்டத் தில் கலந்து கொண்டனர்.

திரு. விநயகமூர்த்தி அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறிய தாவது:—

"இந்த சபையில் பதவி வழி அங்கத்தவர்களும் தெரிவு வழி அங்கத்தவர்களும் இருக் கின்றோம். பதவி வழி அங்கத்த வர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களே அபிவிருத்தி வேலைகளுக்கான நிதிகளை ஒதுக்கீடு செய்து வருகின்றனர்.

ஆனால் தெரிவு வழி உறுப் பினர்களான நாம் எதுவும் செய்ய முடியாதவர்களாகத் தான் இந்த சபையில் இருக்கின் றோம்.

இந்த மாவட்ட அபிவிருத் திக்கான நிதிகளைக் கையாளும் போது எமக்கு எவ்வித ஒதுக் கீடும் கிடைப்பதில்லை.

கண்டி போன்ற அபிவிருத்திச் சபைகளில் தெரிவு வழி உறுப் பினர்களுக்கும் நிதி ஒதுக்கீடு கள் கிடைக்கின்றன. அது போல் இங்கு ஏன் எமக்கும் ஒதுக்கீடுகளைத் தர முடியாது?

இது விடயத்தில் எமது தெரிவு வழி உறுப்பினர்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண் டும். இன்னொருவரில் தங்கியிருக் கும் நிலை எமக்குத் தேவை இல்லை.

— இவ்வாறு அவர் கூறினர்.

(ஐ–217)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைப் போட்டி

வவுணதீவு, ஜூன் 4

மட்டக்களப்பு மாவட் டத்தில் கிராமிய அபிவிரு த்தி அமைச்சினல், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அனுசரணையுடன் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய் கைப் போட்டிகள் நடத் தப்பட்டிருக்கின்றன.

இதற்கான ஒழுங்குகளை உடனடியாக மேற்கொள்ளு மாறு மாவட்ட கிராம அபி விருத்தி உத்தியோகத்தர் ஜனாப் ஏ. எல். எம். முஜீம் சகல கிராம உத்தியோகத்தர்களை யும் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக அவரால் அனுப்பப்பட்டிருக்கும் சுற்று நிருபத்தில் பின்வருமாறு தெரி விக்கப்பட்டிருக்கிறது:—

பயிர்ச் செய்கைப் போட்டிக் குத் தேவையான விதைகள், கன்றுகள். பசளை, கிருமிநாசனி போன்றவற்றை போட்டியாளர் கள் மாவட்ட கமநல சேவை நிலையங்களில் பெற்றுக் கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

போட்டியாளர் ஒருவர் குறை ந்தது ¼ ஏக்கர் நிலத்தில் ஒரு வீட்டுக்குத் தேவையான சகல உணவுப் பயிர்களையும் பயிரிட வேண்டும்.

போட்டியில் வெற்றி பெறும் கிராம அபிவிருத்திச் சங்கங் களுக்கான பரிசுகள் வழங்குவ தைப் பற்றி தொகுதி நாடாளு மன்ற உறுப்பினர்களுடன் கல ந்துரையாட வேண்டும்.

(ல–ஜூ–318)

## தங்கச் சங்கிலியை பறிக்க முயன்ற மாணவன் கைது

கொழும்பு, ஜூன் 5

கத்தியைக் காட்டிப் பய முறுத்தி பாதையில் சென்று கொண்டிருந்த பெண்மணி யின் தங்கச் சங்கிலியைப் பறிக்க முயன்ற பாடசாலை மாணவன் மருதானைப் பொலீஸாரால் கைதுசெய் யப்பட்டார்.

இச் சம்பவம் சனிக்கிழமை மருதானை சிறிதம்ம மாவத் தைக்கு அருகில் நடைபெற்றது.

மேற்படி சந்தேக நபர் தெமட்டகொடைப் பகுதியில் உள்ள மகாவித்தியாலயத் தில் பத்தாம் வகுப்பில் படிக் கும் மாணவன் என்று பொலீ ஸாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்தது.

(ப– ர)

## டாக்டர்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஜூன் 5

பிரிட்டனில் தொழில் புரிவதற்காக, 1982 ஆம் ஆண்டில் மாத்திரம், இலங் கையிலிருந்து சுமார் 156 டாக்டர்கள் வெளியேறி இருக்கிறார்கள்.

இத்தகவலை சுகாதார அமைச் சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்தார்.

அண்மையில் அமைச்சர் பிரிட் டனுக்கும் சென்றிருந்தார். அப் போது பிரிட்டிஷ் சுகாதார அமைச்சே இத்தகவலை அமைச் சரிடம் வெளியிட்டதாகக் கூறப்பட்டது.

இவ்வாறு இலங்கையை விட்டு வெளியேறிய இவர்கள், அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் தற் காலிக டாக்டர்களாகவே கடமை ஆற்றி வருகின்றனர் என்றும் அமைச்சர் தெரிவித் தார்.

(ண–ர)

இவர்தான் "தபம்", "ஆறி லிருந்து அறுபதுவரை", "நெஞ் சுக்கு நீதி" மற்றும் 20 படங் களில் நடித்த பழைய சங்கீதா. நீண்ட கால இடைவெளிக்குப் பின்பாக புது சங்கீதாவாக, "கவர்ச்சி" நடனமாடும் சங்கீ தாவாக மீண்டும் வந்திருக் கிறார்.

சங்கீதா நடனம் ஆடிய காட் சியை சோபனுஸ் வழங்கும் ஏ. ரத்தினத்தின் "உறவைக் காத்த கிளி" என்ற படத்துக்காக காமிராவை சுழற்றி சுழற்றி பல கோணங்களில் படம் ஆக்கினர் டி. ராஜேந்தர்.

கதை முதல் அனைத்து தொழில் நுட்பமும் இவரே!

இவைகளுடன் குடிகாரன், நல்லவன் என இரட்டை வேடத் திலும் நடிக்கிறார் டி. ராஜேந்தர். சரிதா, மேஜர் சுந்தரராஜன், எஸ். எஸ். சந்திரன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

(ல–10)



சாதனாவின் நெஞ்சத்தை பஞ்சணை என்று நினைத்து விட்டாரோ நரேஷ்குமார்? [படம்: நெஞ்சத்தை அள்ளித்தா]

(ல–10)

## தேவிபாலா – ஆனந்த் ஜோடி நடிக்கும் "நியாயம் கேட்கிறேன்"

'இரண்டு இளம் சிட்டுக்களின் சந்திப்பிலேதான் எத்தனை இன்பப் பெருக்கு!'

"புதுசு இது புதுசு அனுப வம் எனக்கிது புதுசு ஆசையில் மனசு ஆடி வரும் வயசு" என்று இளம் ஜோடி தேவி பாலா – ஆனந்த்பாபு ஆடிப் பாடி ஆனந்தம் கொள்ளும் காட்சி ஒன்று விசாகம் பிலிம்ஸ் "நியாயம் கேட் கிறேன்" படத்திற்காக பட மாக்கப்பட்டது.

இருமனம் கலந்தால் திரு மணம். காதல் சிட்டுகள், இப் பொழுது கணவன் – மனைவி. "என் நெஞ்சில் பள்ளி கொண்ட மானே, மானே! என்றென்றும் உன் சொந்தம் நானே நானே" என்று இரு வரும் (தேவிபாலா– ஆனந்த் பாபு) இசைமழை பொழிய உல்லாச உலகில் ஆனந்த பவனி வரும் காட்சியும் படமாகி யது.

இயற்கை எழில் சிந்தும் ஊட்டி, குன்னூர், கொடைக்கா னல் பகுதிகளில் என். ஆர். கே. மூர்த்தி ஒளிப்பதிவில் இயக்கு நர் எஸ். முத்துசாமி காட்சி களை படமாக்கினர்.

ஜீவா, ஒய். விஜயா, ஜெயமா லினி, பாக்கியலட்சுமி, செந் தாமரை, சுந்தரராஜன், வெ. ஆ. மூர்த்தி செஞ்சி கிருஷ்ணன், குமரிமுத்து மற்றும் பலர் நடிக்கும் இதன் வசனத்தை வலம்புரி முருகானந்தம் எழுத, இளையராஜா இசை அமைக்கி றார்.

(ஜூ–10)

தினபதி சினிமா

## எல். ஆர். ஈஸ்வரி நடிக்கிறார்

ஸ்ரீ கருமாரி காமாட்சி அம் மன் பிலிம்ஸ் நிறுவனத்தார், "அம்மன் காட்டிய வழி" என்ற படத்தை தயாரிக்கிறார் கள்.

பாண்டியன், சந்திரசேகர். அருணகுமாரி, இந்திரா உட்பட பலர் நடிக்கும் இந்தப் படத்தை ஆர். எஸ். பூப்பாண்டியன் கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார்.

ஐ. எஸ். முத்து, முருகேஷ் புதிய இசை அமைப்பாளராக அறிமுகமாகிறார்.

கௌரவ வேடத்தில் ஒரு பாடல் காட்சியில் பின்னணி பாடகி எல். ஆர். ஈஸ்வரி நடிக் கிறார்.

அம்மனக கௌரவ வேடத் தில் கே. ஆர். விஜயா நடிக் கிறார்.

(ஜூ–10)

## இது என்ன நியாயம்? தொடக்க விழா

ஸ்ரீ சொர்ண லட்சுமி கலா மந்திர் படக் கம்பெனியார் தயாரிக்கும் "இது என்ன நியா யம்?" படத் துவக்க விழா பாடல் பதிவுடன், பிரசாத்தில் நடந்தது.

"தண்ணிக் கொடம் தூக்கி வந்தா சமஞ்ச பொண்ணு. அத்த மகன் சுத்தி வர அமைச்ச பொண்ணு. எட்டு மேல எட்டு வச்சுப்போக, சித்தாடையில் சிக்கி மனம் நோக..." என்று வாலி எழுதிய பாட்டுக்கு இளைய ராஜா இசை அமைக்க, மலே சிய வாசுதேவன் குரல் கொடுத் தார்.

விஜயகாந்த் – ரேவதி ஜோடி யுடன் மனோரமா, காந்திமதி, வினுசக்கரவர்த்தி, ஜனகராஜ் ஆகியோருடன் கௌரவ வேடத் தில் நடிக்கிறார் மோகன்.

மணிவண்ணன் கதை – வச னம் எழுதி இயக்குகிறார் ஒளிப் பதிவு – ரவிபாபு.

(ஜூ–10)

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 5 —
— சுடர் 17 கதிர் 2693 —

## ஏன் இந்த நஷ்டம்?

வெளிநாடுகளில் இருந்து அரசாங்கம் இறக்குமதி செய்து வைத்திருந்த பெருமளவு விதை உருளைக் கிழங்கு பழுதடைந்து விட்டது.

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த வெலிமடை, ஊவா பரணகம, பண்டாரவளை, அப்புத்தளை, வியலுவ, ஹாலி-எல ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக வைத்திருந்த விதை உருளைக் கிழங்கே பழுதடைந்திருக்கிறது.

மொத்தம் 35 தொன். பெறுமதி சுமார் அறுபத்தைந்து லட்சம் ரூபா என்று சொல்லப்படுகிறது. அவ்வளவும் நஷ்டம்!

நுவரெலியாவில் உள்ள சீத்தா எலிய விவசாயப் பண்ணையில் வைக்கப்பட்டிருந்த விதை உருளைக் கிழங்கே பழுதடைந்து, இவ்வளவு பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நஷ்டத்தோடு விஷயம் முடிந்து விடாது. பெருங் கஷ்டமும் ஏற்படப் போகிறது.

இப்போது ஒரு கிலோ உருளைக் கிழங்கின் விலை சுமார் 15 ரூபா. இம்முறை உருளைக் கிழங்கு செய்கை பாதிக்கப்பட்டு இருப்பதால் சந்தையில் உருளைக் கிழங்கின் விலை வெகுவாக ஏறப் போகிறது.

பதுளை மாவட்டம் உருளைக் கிழங்குச் செய்கைக்குப் பெயர் பெற்றது. நாட்டுக்குத் தேவையான உருளைக் கிழங்

# தமிழகத்தில் மீண்டும் மதுவிலக்கு!

## எம். ஜி. ஆர். அறிவிப்பு

மயிலாடுதுறை, ஜூன் 4

வெகு விரைவில் மீண்டும் மதுவிலக்கு வரும் என்று முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். கூறினார்.

ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் பேசும்போது கூறியதாவது:

கூடிய விரைவில் மதுவிலக்கை படிப்படியாக கொண்டு வந்து மது இல்லாமலேயே அறவே ஒழித்து விடுவேன்.

இதை நான் சட்ட சபையிலும் கூறினேன். நான் ஆட்சிக்கு வந்த காலத்தில் குடிப் பழக்கத்தை ஒழிக்க கடும் சட்டம் கொண்டு வந்தேன்.

மதுவிலக்கை தளர்த்தத்தான் செய்து இருக்கிறேன், ரத்துச் செய்யவில்லை.

இதனால் கிடைக்கும் வருமானத்தை நல்ல திட்டத்திற்கு செலவிட வேண்டும் என்பதற்காகத்தான் சத்துணவு திட்டத்தை செயல்படுத்தினேன்.

முதலில் 35 லட்சம் லிட்டர் சாராயம் குடித்தார்கள். இப்போது $1\frac{1}{2}$ கோடி லிட்டர் சாராயம் விற்பனை ஆகும் அளவு குடிக்கிறார்கள்.

இதனால் குடிப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது என்று அர்த்தம் அல்ல. கள்ளச் சாராயத்தை அவர்கள் குறைத்து நல்ல சாராயத்தை குடிக்கிறார்கள்.



எம்.ஜி.ஆர்

இன்னொரு குற்றச்சாட்டையும் கருணாநிதி கூறி இருக்கிறார். ஆசிரியர்கள் சத்துணவுத் திட்டத்தால் சமையல் வேலை செய்கிறார்கள் என்று.

இவரது ஆட்சியில்தான் நன்கொடை வசூலிக்கும் பணியை ஆசிரியர்கள் செய்தார்கள்.

சத்துணவு திட்டத்தின் மூலம் 1 லட்சத்து 80 ஆயிரம் பெண்களுக்கு வேலை கொடுத்து இருக்கிறோம். குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். அடுத்த ஆண்டு நிச்சயம் 6 லட்சம் பேருக்கு வேலை கொடுப்போம்.

மேலும் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு அடுத்த ஆண்டு முதல் சீருடை வழங்க இருக்கிறோம்.

ஊழல் முறைகேடுகள் போன்றவற்றை கண்டுபிடித்து நீக்குவதற்காக, என்னுடைய நேரடி மேற்பார்வையில் ஒரு தனி பிரிவு அமைக்கப்பட்டு உள்ளது.

முன்பு 50 ஆயிரம் பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை கொடுத்தார்கள். இப்போது 1 லட்சத்து 99 ஆயிரம் பேர்களுக்கு வழங்கப்படுகிறது.

14 ஆயிரம் பேர்களுக்கு கூட்டுறவு ஆலைகளில் வேலை கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் கருணாநிதி இல்லை என்கிறார்.

நீதியின் சாபத்தை கருணாநிதி பெறக் கூடாது. நமது திட்டங்களான சத்துணவுத் திட்டம், தண்ணீரைவுத் திட்டம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு திட்டம் போன்றவற்றை அடுத்த 5 ஆண்டுத் திட்டத்துடன் சேர்ப்பதாக மத்திய அரசு உறுதி கூறி உள்ளது.

அதுமட்டுமல்லாமல் தமிழக திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதோடு, திட்டங்களை நிறைவேற்ற முழு ஒத்துழைப்பும் கொடுத்து வருகிறார்கள்.

மக்களுக்கு என்ன என்ன தேவையோ அவைகளை நிறைவேற்றுவேன். நெசவாளர்களுக்கு கூலியை உயர்த்தி இருக்கிறோம். கருணாநிதி இனி ஓய்வு எடுத்துக் கொண்டால் நல்லது.

சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் படித்து வேலை இல்லாத இளைஞர்கள் தொழில் தொடங்க மத்திய அரசு ரூ.25 ஆயிரம் கடன் வழங்குகிறது. அந்த திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் மட்டும் ரூ. 45 கோடியை மத்திய அரசு செலவிட்டு உள்ளது.

இவ்வாறு முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். கூறினார்.

(ல-10)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மரநடுகை வாரம்

## றெப்பாஜ நிறுவனம் நடத்தும்

பிரபல தொண்டர் நிறுவனங்களில் ஒன்றான விசுவமடு றெட்பாஜ நிறுவனம் பாடசாலைகளுக்கிடையே மரநடுகை வாரம் ஒன்றை நடத்தும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமுள்ள சுமார் 35க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மரநடுகை வாரம் ஆரம்பிக்கப்படும்.

பின்னர் றெட்பாஜ நிறுவனத்தின் விசேட குழு, பங்குபற்றிய சகல பாடசாலைகளுக்கும் சென்று பரிசிலனை மேற்கொள்ளும்.

திறமையான முறையில் மரங்களைப் பேணிப் பாதுகாத்து வரும் முதல் மூன்று பாடசாலைகளுக்கும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

நோர்வீஜியப் பாடசாலைக் குழந்தைகளால் "குழந்தைகளுக்குக் குழந்தைகள் உதவுகின்றன" என்னும் இயக்கத்தின் மூலம் திரட்டப்படும் நிதியையே றெட்பாஜ இலங்கை நிறுவனம் இம்முயற்சிக்குப் பயன்படுத்தும்.

விசுவமடு றெட்பாஜ நிறுவன இயக்குநர் எஸ். பாலச்சந்திரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

(ல-244)

# ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டது ஏன்?

## வைத்திய கலாநிதி விளக்கம்

சாவகச்சேரி, ஜூன் 4

உலகின் ஐந்தில் நான்கு பகுதி மக்கள் இன்று சுகாதார வசதியின்றியும், சமூக பொருளாதார வசதியின்றியும் வாழ்கிறார்கள். இரண்டாயிரமாவது ஆண்டளவில் இவர்கள் சுகாதார வசதிகளைப் பெறுவார்கள். அத்துடன் சமூக பொருளாதார உயர்வையும் அடைய வேண்டும். அந்த நோக்கத்திலேயே இந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. நடராஜா இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரியில் ஆரம்ப சுகாதார கவனிப்பு சம்பந்தமான சேவை நெறிப் பயிற்சி அண்மையில் ஆரம்பமானது. இப்பயிற்சி தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும். இதனை ஆரம்பித்து வைத்துப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி நகராண்மைக் கழக மண்டபத்தில் இப்பயிற்சி தொடர்ந்து நடைபெறுகின்றது.

சாவகச்சேரி கிளிநொச்சி குடும்ப நலத் திட்டத்தினர், சுகாதார பரிசோதகர்கள், விசேட இயக்கங்களின் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டு பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. நடராஜா அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

சுகாதாரம் என்பது தனி மனித உரிமை. சுகவாழ்வே இதன் நோக்கம்.

சுகவாழ்வு பெற சுகாதார சேவையின் பங்கு மாத்திரம் போதாது. சமூக, பொருளாதார பங்களிப்பும் அவசியம்.

இவ்வாறு அவர் கூறினார்.

(ல-51)

## செய்தித் திரட்டு

### பாதை சீர்கேடு

பொத்துவில், ஜூன் 4

பொத்துவிலில் இருந்து பாணமை நோக்கிச் செல்லும் பிரதான பாதை மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கே இதற்குக் காரணம். இதனால் போக்குவரத்துக்குப் பெரும் கஷ்டமாக இருப்பதாக இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

(ஜூ-247)

### அன்பளிப்பு

வெலிகாமம், ஜூன் 4

மாத்தறை ஹரிஸ்சந்திர நிறுவனம், மாத்தறை ஹிந்துடிய தர்மராஜ வித்தியாலயத்திற்குச் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்பு நாற்காலிகளையும், அப்பியாசப் புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்கி இருக்கிறது.

மேற்படி பாடசாலையில் பழுதடைந்து இருந்த பெருந்தொகையான நாற்காலிகளையும் இந்த நிறுவனம் திருத்தி அமைத்துக் கொடுத்து இருக்கிறது.

(ஜூ-331)

### தொழுகை

பலாங்கொடை, ஜூன் 4

பலாங்கொடை தன்ஜன்தென்னையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புதிய பள்ளிவாசலில் முதன்முறையாக இவ்வருடம் புனித ரமழான் மாதத்தில் தராவீஹ் தொழுகையை நடத்த தன்ஜன்தென்னை இஸ்லாமிய சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

கடந்த வருடங்களில் இப்பகுதி முஸ்லிம்கள் ரமழான் மாதத்தில் தராவீஹ் தொழுகையினை நிறைவேற்ற தபீதர் ஜெயிலாணி பள்ளிவாசலுக்குச் சென்றனர்.

(ஜூ-38)

### உற்சவம்

புங்குடுதீவு, ஜூன் 4

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 4ஆம் திகதி

பதுளை மாவட்டம் உருளைக் கிழங்குச் செய்கைக்குப் பெயர் பெற்றது. நாட்டுக்குத் தேவையான உருளைக் கிழங்கில் பெரும் பகுதி பதுளை மாவட்டத்தில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது.

அங்கே அந்தர் 800 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த விதை உருளைக் கிழங்கு இப்போது அதைப் போல் இரண்டு மடங்கு விலைக்கு விற்கப்படுகிறது.

எல்லா விவசாயிகளாலும் இந்த விலை கொடுத்து வாங்கி உருளைக் கிழங்கைச் செய்கை பண்ண முடியுமா?

பலர் இம்முறை உருளைக் கிழங்கைச் செய்கை பண்ணுவதில்லை என்ற முடிவுக்கே வந்து விட்டார்கள்.

இதனால் அவர்களுக்கு மட்டுமல்ல, நாடு முழுவதற்குமே பாதிப்பு ஏற்படப் போகிறது.

சீத்தா எலிய விவசாயப் பண்ணையில் வைக்கப்பட்டிருந்த விதை உருளைக் கிழங்கு பழுதடைந்து போனது ஏன்?

பணியாளர்களின் கவனக் குறைவா? அலட்சியமனப் பான்மையா? அல்லது உருளைக் கிழங்கை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, அதன் மூலம் பல்வேறு வழிகளில் பணம் சம்பாதிப்பதற்கு ஒரு சிலர் திட்டமிட்டுச் செய்த காரியமா இது?

இப்படிப் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன. பூரண விசாரணை நடத்தி உண்மையை அறிய வேண்டும்.

விதை உருளைக் கிழங்கு பழுதடைந்து போனதால் ஏற்பட்ட நட்டத்தை அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை வேறு மாவட்டங்களிலிருந்தாவது விதை உருளைக் கிழங்கைக் கொண்டு சென்று பதுளை மாவட்ட விவசாயிகளுக்கு உடனடியாக விநியோகிக்கவும் வேண்டும்.

வேறு மாவட்டங்களில் விதை உருளைக் கிழங்கு மீதமாக இல்லையானால் காலம் கடந்து போகு முன் அயல் நாடு எதிலிருந்தாவது அவசரமாக விதை உருளைக் கிழங்கைத் தருவித்து விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

யிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமுள்ள சுமார் 35க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மரநடுகை வாரம் ஆரம்பிக்கப்படும்.

இதனையொட்டி மா, பலா போன்ற பழ மரங்களுடன் நிழல்தரு மரங்களுமாக, பாடசாலை ஒன்றுக்கு 100 மரங்கள் வீதம் மேற்படி நிறுவனம் வழங்கும்.

மரநடுகை வாரத்தையொட்டிய பேச்சுப் போட்டி ஒன்றும் மேற்படி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு தரமான பரிசில்கள் வழங்கப்படும்.


மரநடுகை வாரம் முடிந்து சுமார் நான்கு மாதங்களின்

வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

நோர்வீஜியப் பாடசாலைக்

சந்திரன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

(ல-244)



மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக சேவையாளர்களை கௌரவிக்கும் பொருட்டு றோட்டரிக் கழகம் வைபவமொன்றை ஒழுங்கு செய்திருந்தது. இவ் வைபவத்தில் கழகத் தலைவர் திரு. ஏ. கே. பத்மநாதன் மாங்கேணி றோ. க. த. க. பாடசாலை அதிபருக்கு பரிசு வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காண்க.

[படம்: இரா. உதயகுமார்]

(ல-318)

## ஒரு ரூபா லொத்தர் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 5

தேசிய லொத்தர் சபை நடத்தும் ஒரு ரூபா பரிசுச் சீட்டின் விலை ஐந்து ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

பரிசுத் தொகைகளும் இதற்கமைய அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாம் பரிசாக 5 லட்சம் ரூபாவும், இரண்டாம் பரிசாக இரண்டரை லட்சம் ரூபாவும், மூன்றும் பரிசாக ஒன்றரை லட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

நான்காவது பரிசாக 75,000 ரூபா, ஐந்தாம், ஆறும் பரிசுகளாக தலா 50,000 ரூபா—

ஏழாம், எட்டாம், ஒன்பதாம், பத்தாம் பரிசுகளாகத் தலா 25,000 ரூபாவும் —

5,000 ரூபா பெறுமதியான 100 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யூ. எம். திலகரத்ன இதனை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டிருக்கிறார்.

(எ-8)

## நிதி ஒதுக்கீடு

பொத்துவில், ஜூன் 4

பொத்துவில் அபிவிருத்திச் சபை உப அலுவலகத்திற்குட்பட்ட பகுதிக்கு அபிவிருத்தி வேலைகளுக்கென 12 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்நிதியில் 9 லட்சம் ரூபாவை பொத்துவில் முதலாவது எம். பி. ஜனாப் எம். ஐ. உதுமாலெவ்வையும், 3 லட்சம் ரூபாவை அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து [illegible] (ல-36)

## உர விநியோக மோசடிகளைத் தவிர்க்க புதிய திட்டம் உருவாகும்

கொழும்பு, ஜூன் 5

உரக் கூட்டுத்தாபனத்தின் ஹுனுப்பிட்டி களஞ்சியத்துக்கு அனுப்பப்படும் உரம், இரசாயனப் பொருட்கள் போன்றவற்றை விசேஷ பரிசோதனைக்கு உட்படுத்தவும் எதிர்காலத்தில் மோசடிகள் நடைபெறாதவாறு தடுக்கவும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவிருக்கிறது.

உரக் கூட்டுத்தாபனம் மேற்படி திட்டத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், ஹுனுப்பிட்டி களஞ்சிய சாலைக்குச் செல்லும் லொறிகள் விசேஷ பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

இதற்காக முக்கிய அதிகாரி ஒருவரும் நியமிக்கப்படுவார்.

சபுகஸ்கந்தையிலிருந்தும், துறைமுகத்தில் இருந்தும் ஹுனுப்பிட்டி களஞ்சிய சாலைக்கு வரும் உரம், மற்றும் இரசாயனப் பொருள்கள் சரியாக இருக்கின்றனவா? என்பது குறித்து புதிதாக நியமிக்கப்படும் அதிகாரி விழிப்பாக இருப்பார்.

இதேவேளையில் வருடாந்த கணக்கு விவரங்களடங்கிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சின் அதிகாரி [illegible] கூட்டுத்தாபனம் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக, உரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. ராஜா. குறுப்பு, அண்மையில் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

(எ-11)

இப்பயிற்சி தொடர்ந்து 10

(ல-51)

## கொடூரமான இஸ்ரவேலருடன் இணைந்து அரசு செயல்படக் கூடாது

### இளைஞர் முன்னணி கண்டனம்

கொழும்பு, ஜூன் 5

இஸ்ரவேலர் அகில உலகப் பயங்கரவாதிகள் என்பதைத் தெரியாதவர்கள் எவரும் இல்லை. அத்தகைய கொடூரமானவர்களோடு இணைந்து நமது நாட்டுத் தீவிரவாதிகள் விடயத்தில் செயல்பட முயல்வது கவலைக்குரிய செயலாகும்.

இந்தத் தீர்மானத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். கல்ஹின்னை இளைஞர் முன்னணி, "இஸ்ரவேல் நலன்காக்கும் பிரிவு" ஒன்றை அமெரிக்கத் தூதரகத்தில் அமைக்க அரசாங்கம் அனுமதி கொடுக்கத் தீர்மானித்திருப்பதைக் கண்டித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இஸ்ரவேலுக்கு எந்த வகையிலும் இந்த நாட்டில் இடம் கொடுப்பதை எமது முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த நடவடிக்கையால் நமது பொருளாதாரத்திற்கு உயிர் நாடியாக விளங்கும் தேயிலையை வாங்கியும், தொழில் வசதிகளை செய்து தந்தும், நன்கொடைகளின் மூலமும், சலுகை விற்பனைகள் மூலமும் ஆதரவு தந்துதவும் அரபு முஸ்லிம் நாடுகளையே நாம் புண் படுத்துகிறோம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

இந்த நாட்டு முஸ்லிம்கள் நாடு பிளவு படுவதையோ, அந்நியரால் அபகரிக்கப்படுவதையோ, அடிமைப்படுத்தப்படுவதையோ என்றும் ஆதரவளித்தவர்களுமல்லர்; ஆதரிப்ப போகிறவர்களுமல்லர்.

அத்துடன், இலங்கை முஸ்லிம்கள் இந்த நாட்டுக்காக, இதன் பாதுகாப்புக்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்தவர்கள். இனியும் செய்யத் தயங்காதவர்கள்.

மனி தாபிமானத்தையுடைய இலங்கை முஸ்லிம்கள் மாத்திரமல்ல, ஏனைய மக்கள் அனைவரும் நாட்டுக்கே பாதகத்தை விளைவிக்கும் இந்தச் செயலை உடனே கைவிடும்படி அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்றும் கல்ஹின்னை இளைஞர் முன்னணி கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(எ-க-11)

## முஸ்லிம் கொலனி மக்களின் அவலம்




பொலன்னறுவ மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் கொலனி கிராமம் சுகாதார சீர்கேடுகள் நிறைந்ததாக இருக்கிறது. இதனால் இக்கிராம மக்கள் பல்வேறு நோய்களுக்கும் உள்ளாக நேரிடுகிறது.

இக்கிராமத்தைச் சுற்றிப் பல அரிசி ஆலைகள் இருக்கின்றன. இந்த ஆலைகளிலிருந்து கழிவுப் பொருட்களான உமி, கழிவுநீர் என்பன வெளியாகின்றன.

இவை இக்கிராமத்திற்கூடாகச் செல்லும் கால்வாயில் போய்ச் சேருகிறது.

விவசாயத்துக்காக தண்ணீர் பெறப்படும் இக்கால்வாயில் இவை சேர்வதால் பயிர்கள் [illegible] நாசமடைவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

அத்துடன் இக்கிராம மக்கள் குளிப்பதும் இக்கால்வாயில் தான். இதில் குளிப்பதால் இவர்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

வளர்ந்தவர்களுக்கு சொறி, சிரங்கு சிறுபிள்ளைகளுக்கு வயிற்றுளைவு போன்ற நோய்கள் இப்பகுதியில் அதிகம் ஏற்படுவதற்குக் காரணம் இந்த அசுத்த தண்ணீர்தான் என்று நம்பப்படுகின்றது.

இப்பகுதி மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி அரிசி ஆலைச் சொந்தக்காரர்களுக்கு எடுத்து விளக்கிய போதிலும் [illegible] அதைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இப்பகுதி மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

ஆதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு இப்பகுதி மக்களின் அவல நிலையைப் போக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கே. ஐ. எம். இஸ்மாயில்
பொலன்னறுவை

சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். உற்சவம் தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி பகல் தேர்த் திருவிழாவும் அன்று மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ நாட்களில் விசேட பஜனைகள், சமயச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும்.

(ஜ-240)

## ஆஜர்

வாழைச்சேனை, ஜூன் 4

சட்டவிரோதமான முறையில் விறகுகளை ஏற்றி வந்த பத்துப் பேரை மட்டக்களப்பு வட்டார வன அதிகாரி திரு. கே. தட்சணாமூர்த்தி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

மேற்படி பத்துப் பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் ஒவ்வொருவருக்கும் தலா 250 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

விறகுகளைப் பறிமுதல் செய்து வண்டி, மாடுகளை வழங்குமாறு நீதிவான் தீர்ப்பளித்தார்.

(ஜ-319)

## புனரமைப்பு

பலாங்கொடை, ஜூன் 4

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பலாங்கொடை ஜும்ஆப் பள்ளிவாசல் புனரமைப்புச் செய்யப்பட்டது.

பலாங்கொடை இஸ்லாமியச் சங்கத்தின் மூலம் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றன.

(ஜ-38)

## நாற்றுமேடை

வாழைச்சேனை, ஜூன் 4

அமெரிக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் காட்டுத் திணைக்களம் கிரான், அலியாஓடை ஆகிய இரு இடங்களிலும் நாற்று மேடைகளை ஆரம்பித்திருக்கிறது.

இவ்விரு நாற்று மேடைகளிலும் "யூக்கலிப்ற்றஸ்" மரக்கன்றுகள் உற்பத்தி செய்து பொலித்தீன் பைகளில் இடப்படும்.

தரவை, கிரான், பன்றிமடு, கோரகல்லிமடு, அலியாஓடை, ஆகிய பகுதிகளில் இவை நடப்படும்.

மேற்படி திட்டத்திற்கும் பொறுப்பதிகாரியாக வட்டார வன அதிகாரி திரு. எம். கே. செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். [illegible]

# பஞ்சாப் மாநிலத்தில் போக்குவரத்து தடை

## தங்க ஆலயத்தை சுற்றி தொடர்ந்து இராணுவ முற்றுகை

புதுடில்லி, ஜூன் 4

**பஞ்சாப் மாநில அரசாங்கம் சகல போக்குவரத்து சேவைகளுக்கும் தடை விதித்துள்ளது. சீக்கிய— இந்து விவகாரங்கள் பற்றிய செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. சீக்கிய புனித ஸ்தலமான தங்கக் கோயிலைச் சுற்றி வளைக்குமாறு துருப்புகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.**

தடையை அடுத்து ரயில், பஸ் மற்றும் தனிப்பட்ட போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இன வாதத்தைத் தூண்டும் செய்திகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. பிரபல நகரங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

தங்கக் கோயிலின் மீது இராணுவத் தாக்குதல் நடைபெறலாமென சீக்கியத் தலைவர்கள் நேற்று எச்சரிக்கை விடுத்தனர்.

தங்கக் கோயிலில் உள்ள சீக்கிய தீவிரவாதிகளின் உத்தரவின் பேரிலேயே இனவாதத் தாக்குதல்கள் இடம்பெறுவதாக இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த ஆறு மாத காலமாக நடைபெற்ற இனக் கலவரங்களினால் இங்கு 280 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

பஞ்சாப்பில் செய்திகள் முற்றாக இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகிறது. அரசாங்கம் வன்முறைகளைக் கட்டுப்படுத்த எடுத்து வரும் முயற்சிகள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் எவ்வாறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி புதுடில்லியில் உள்ள அதிகாரிகள் கருத்து கூற மறுத்தனர்.

அடுத்துள்ள ஹரியானா மாநிலத்துடனான பஞ்சாப்பிய எல்லையில் மேலதிக பாதுகாப்புப் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

சீக்கியர்களின் பிரதான கட்சியான அகாலி தள்ளின் தலைவரான ஹர்சன்ட் சிங் லோங்கோவால் நேற்று, புனிதக் கோயில் வளவினுள் துருப்புகள் தாக்குதலை மேற்கொள்ளலாம் என அச்சம் தெரிவித்தார்.

ஆனால் அவசியமேற்பட்டால் மட்டுமே இராணுவம் நிலை நிறுத்தப்படுமென இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

தங்கக் கோயிலுக்குச் செல்லும் வழிகளை, இராணுவ வீரர்கள் நிறைந்த டிரக் வண்டிகள் முற்றாகத் தடை செய்துள்ளன.

அதிகாரிகளால் தீவிரவாதிகளின் தலைவரென குறிப்பிடப்பட்டுள்ள சீக்கிய மத பிரசாரகர் ஜெர்னெய்ல் சிங் பிந்ரவாலே. சீக்கியர்களும், அரசாங்கமும் யுத்தத்திலீடுபட்டுள்ளன என்று கூறினார்.

பஞ்சாப்பில் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டதை பிரதான எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் வரவேற்றுள்ளனர். தங்கக் கோயில் மீது முற்றுகை நடைபெற்றால் அதைத் தாங்கள் எதிர்க்கப் போவதில்லை என அவர்கள் கூறினார்.

இந்திரா காந்தி சீக்கிய — இந்து வன்செயல்களைக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்ளவில்லையென எதிர்க்கட்சியினரும், இந்தியப் பத்திரிகைகளும் குறை கூறியிருந்தன. இந்திரா காந்தி அடுத்த ஜனவரியில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான முடிவெடுப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப்பில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற தீவிர



## நரசிம்மராவ் இந்தோனேஷியா விஜயம்

ஜகார்த்தா, ஜூன் 4

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ், 5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இந்தோனேசியா வந்து சேர்ந்தார்.

இந்த விஜயத்தின் போது ஈரான் — ஈராக் யுத்தத்தை உள்ளடக்கிய சர்வதேச உறவுகள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் இவர் ஈடுபடுவார் என ராஜதந்திரிகள் கூறினர்.

இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் மொச்டார் குசுமாட்மட்ஜாவுடன் அவர் இரு நாட்கள் பேச்சுவார்த்தை நடத்துவார். ஜனதிபதி சுஹார்ட்டோவையும், பொருளாதார அமைச்சர் அலிவர்தானவையும் திரு. நரசிம்மராவ் சந்திப்பார்.


எகிப்திய ஜனதிபதி ஹொஸ்னி முபாரக்கின் யோசனைப்படி வளைகுடா யுத்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்த அணிசேரா இயக்க நிர்வாகக் கமிட்டியைக் கூட்ட இந்தியா திட்டமிட்டுள்ளதாவென இந்திய அமைச்சரைக் கேட்கப் போவதாக இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் பத்திரிகையாளர்களிடம் கூறினர்.

அவ்விதம் கூட்டத்தை நடத்த இந்தியா திட்டமிட்டிருந்தால், தாங்கள் எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கப் போவதில்லையென அவர் சொன்னர்.

அணிசேரா இயக்க அங்கத்துவ நாடுகளில் இந்தியா, இந்தோனேசியா, எகிப்து ஆகியவை முன்னணி மிதவாத நாடுகளாக இருந்து வருகின்றன.

(த— ந)

## பீரங்கிப் படை அணிவகுப்பு



பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியார் பிரிட்டனின் டோர்ட்மன்ட் இராணுவ முகாமுக்கு விஜயம் செய்து பீரங்கிப் படையின் அணிவகுப்பு ஒன்றைப் பார்வையிட்ட போது எடுத்த படம். (ப)

## தாய்வானில் வெள்ளம் 23 பேர் மரணம்

தாய்பே, ஜூன் 4

வட தாய்வானில் கடும் மழையைத் தொடர்ந்து வெள்ளத்திலும் மண் சரிவுகளிலும் 23 பேர் கொல்லப்பட்டனர். எட்டுப் பேர் காணமற் போயுள்ளனர்.

பொலீஸ் அறிக்கைகள் இதனைத் தெரிவித்தன. (ப—ந)

## வங்காள தேச எல்லையில் இந்தியா படைக் குவிப்பு

டாக்கா, ஜூன் 4

வங்காள தேச எல்லையில் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலையைத் தொடர்ந்து இந்த எல்லைப் பகுதியில் இந்தியா தனது துருப்புகளைக் குவித்திருக்கிறது.

இந்திய எல்லைக் காவல் படையினரும், மத்திய ரிசேர்வ் பொலீஸாரும் அங்கு அதிகளவில் அனுப்பப்பட்டு இருக்கின்றனர்.

வங்காள தேசத்தின் ஜிபோங், லோகன், பராஹரின கிராமங்களின் எல்லைப் பகுதியில் ஆயுத வண்டிகளுடன் இந்தியத் துருப்புகள் நிலைகொண்டுள்ளன.

வங்காள தேசத்தில் தடை செய்யப்பட்ட சாந்தி புஹானி (சமாதானப் படை) கெரில்லா இயக்கம் மூன்று வங்காளிகளின் குடியேற்றங்கள் மீது கடந்த வாரம் தாக்குதல் நடத்தின. அந்தத் தாக்குதலில் சுமார் 75 பேர் உயிரிழந்தனர். சுமார் 150 பேர் காயம் அடைந்தனர்.

இந்திய எல்லைப் பகுதி மாநிலமான திரிபுராவில் முகாமிட்டிருக்கும் பிரிதி குமார் சக்மா தலைமையிலான கெரில்லாக்கள் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று வங்காளதேச உள்விவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்காளதேச கிளர்ச்சியாளர்கள் இந்தியாவில் முகாம் அமைத்திருக்கின்றனர் என்று முன்னர் வங்காளதேச அரசு குற்றம் சாட்டியிருந்தது. ஆனல் அந்தக் குற்றச்சாட்டை இந்தியா மறுத்து வருகிறது.

வங்காளதேச அரசாங்கம் வழங்க முன்வந்த மன்னிப்பை நிராகரித்த பிரிதி குமார் சக்மா, சுதந்திரத்துக்கான ஆயுதப் போராட்டத்தை தொடரப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையிலேயே இந்தியத் துருப்புகள் எல்லையில் குவிக்கப்பட்டிருக்கின்றன.

(ப)

எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப்பில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற தீவிர வாதத் தாக்குதல்களில் இறந்த வர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 2 பேர் பஞ்சாப்பின், படிண்டா நகரில் நேற்று சுட்டுக் கொல் லப்பட்டனர். (த-ந)

றனர்.

வங்காள தேசத்தின் ஜிபோங்,

பேர் உயிரிழந்தனர். சுமார் 150 பேர் காயம் அடைந்தனர்.

முன்னர் வங்காளதேச அரசு குற்றம் சாட்டியிருந்தது. ஆனால்

குவிக்கப்பட்டிருக்கின்றன. (ப)



கிழக்கு ஜெர்மன் தலைநகரான கிழக்கு பெர்லினில் நடைபெற்ற ஆயுத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது எடுக்கப்பட்ட படம். சுமார் 5 லட்சம் பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள். (ண)

## உலக வங்கி உதவி

வாஷிங்டன், ஜூன் 4

பாகிஸ்தானின் குடி தண்ணீர் வழங்கல் திட்டமொன்றுக்கு 460 லட்சம் டாலர் கடன் வசதியை உலக வங்கி அங்கீகரித்துள்ளது.

இத்திட்டத்திற்கான நிதி உலக வங்கியின் இணை நிறுவன மான சர்வதேச அபிவிருத்தி ஒன்றியத்தில் இருந்து கிடைக்கும். வறிய நாடுகளின் திட்டங்களுக்கு இந்த ஒன்றியம் நிதியுதவி செய்து வருகிறது. (ண-ந)

# பேருட்டில் முஸ்லிம்கள் இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

பேருட், ஜூன் 4

தெற்கு லெபனானிலிருந்து இஸ்ரவேல் படைகள் வாபஸ் பெற வேண்டுமெனக் கோரி, இஸ்ரவேல் எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்களைக் கோஷித்தவாறு ஆயிரக் கணக்கான முஸ்லிம் மக்கள் நேற்று மேற்கு பேருட் வீதிகளினூடாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றனர்.

இஸ்ரவேல் தெற்கு லெபனானுக்குள் ஊடுருவல் நடத்தி இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதைக் குறிக்கும் முகமாக ஒரு வார கால இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நேற்று லெபனானில் ஆரம்பமாகின.

தெற்கு லெபனான் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி அமைச்சரும், ஷியா முஸ்லிம் மக்கள் படைத் தலைவருமான நாபிஹ் பெரி இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

பேருட்டில் இயங்கி வந்த பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழித்தொழிக்கவென 1982 ஜூன் 6 ஆம் திகதி இஸ்ரவேல் லெபனானுக்குள் படையெடுப்பு நடத்தியது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தும், அவரது ஆதரவாளர்களும் லெபனானை விட்டுத் திரும்பிச் சென்ற போதிலும், இஸ்ரவேல் படைகள் இன்னும் தெற்கு லெபனானில் நிலைகொண்டிருக்கின்றன.

லெபனானின் கல்வி, தொழில் அமைச்சர் சலீம் ஹொஸ், நேற்றைய ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றார்.

"அரபு மக்களே இஸ்ரவேலுக்கு எதிராகக் கிளர்ந்தெழுங்கள்", "இஸ்ரவேலின் பாதுகாவலன் அமெரிக்கா ஒழிக" என்று ஊர்வலத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

லெபனான் இராணுவத்தின் முஸ்லிம் பிரிவு ஆயுத வண்டிகளுடன் நின்று ஆர்ப்பாட்டக்காரர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியது.

கராமியைப் பிரதமராகக் கொண்டு ஒரு மாதத்தின் முன் அமைக்கப்பட்ட லெபனான் ஐக்கிய அரசாங்கம், இஸ்ரவேலின் வெளியேற்றத்தை பிரதான விவகாரமாக வலியுறுத்துகிறது. (ப)

## அமெரிக்காவில் சிறை உடைப்பு

வட கரோலினா, ஜூன் 4

வட கரோலினாவில் உள்ள கூடுதல் பாதுகாப்பு அமெரிக்க சிறைச்சாலை ஒன்றில் இருந்து ஆறு கைதிகள் துணிகரமான முறையில் தப்பிச் சென்றார்கள்.

கொலைக் குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் இந்தக் கைதிகளில் இருவர் பின்னர் கைது செய்யப்பட்டார்கள். (ண)

## பாக். கைதிகள் தப்பி ஓட்டம்

கராச்சி, ஜூன் 4

பாகிஸ்தானின் சிந்து மாநில சிறைச்சாலை ஒன்றிலிருந்து கைதிகள் தப்பியோட முயன்றனர். சிறைக் காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கைதி ஒருவர் மாண்டார்.

ஆயினும் நான்கு கைதிகள் தப்பியோடி விட்டார்கள். (ண)

## ஆயுத கிடங்குக்கு வெடிவைப்பு நால்வர் மரணம்

மணிலா, ஜூன் 4

தென் பிலிப்பைன்ஸில் மன நோய்க்கு சிகிச்சை பெற்று வந்த இராணுவ வீரரொருவர் ஆயுதக் கிடங்கொன்றுக்கு வெடி வைத்தார்.

இதனால் 4 பேர் உயிரிழந்தனர். 3 பேர் காயமடைந்தனர். (ந)

உலகச் செய்திகள்

## எதிர்ப்புகளுக்கு மத்தியில் தென் ஆபிரிக்க பிரதமர் பிரிட்டன் வந்து சேர்ந்தார்

லண்டன், ஜூன் 4

தென் ஆபிரிக்கப் பிரதமர் பீட்டர் போத்தா நேற்று முன்தினம் லண்டன் வந்து சேர்ந்தார். அவருடைய விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆயிரக் கணக்கான இன ஒதுக்கல் எதிர்ப்பாளர்கள் லண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள்.

பிரதமர் போத்தா லண்டன் வந்து சேர்ந்ததும் உடனடியாகவே பிரதமர் திருமதி தாட்சரின் உத்தியோகபூர்வ நாட்டுப்புற மாளிகைக்கு ஹெலிக்கொப்டர் மூலம் அழைத்துச் செல்லப்பட்டார்.

தென் ஆபிரிக்கா, காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் அதன் பிரதமர் ஒருவர் பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இதனால் எதிர்க்கட்சியினர், திருச்சபைக் குழுக்கள், இன ஒதுக்கல் எதிர்ப்பு இயக்கம் ஆகியனவற்றில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. (ண)

## விமான எதிர்ப்பு ஏவுகணை

வாஷிங்டன், ஜூன் 4

அமெரிக்கா 400 விமான எதிர்ப்பு ஏவுகணைகளை சவூதி அரேபியாவுக்கு விற்பனை செய்துள்ளது. ஈரானின் தாக்குதல்களிலிருந்து சவூதி அரேபிய எண்ணெய்க் கப்பல்களையும், தரைக் கட்டடங்களையும் பாதுகாக்க இவை உபயோகிக்கப்படும்.

இந்த ஏவுகணைகளும் அவற்றைச் செலுத்தும் ஊர்திகளும் தற்போது சவூதி அரேபியாவிலேயே உள்ளன. விரைவில் அதன் உரிமைகள் சவூதி அரேபியாவுக்கு மாற்றப்படும். வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இதனைக் கூறினார். (ண-ந)

## துருக்கிய எண்ணெய் கப்பல் மீது தாக்குதல்

பாஹ்ரெய்ன், ஜூன் 4

துருக்கிய எண்ணெய்க் கப்பல் ஒன்று நேற்று வளைகுடாவில் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளானது.

ஈரானிய எண்ணெய் ஏற்றுமதி துறையான கார்க் தீவுக்கு 50 மைல்கள் தெற்கே இந்தத் தாக்குதல் நடைபெற்றது.

இக் கப்பலின் சிப்பந்திகள் கப்பலைக் கைவிட்டுச் சென்று விட்டனர் என்று கப்பல் வட்டாரங்கள் கூறின.

இராணுவ அறிக்கை ஒன்றில் ஈராக், தனது விமானங்கள் நேற்று காலை கார்க் தீவுக்குத் தென்கிழக்கே கடலில் இரு பாரிய இலக்குகளைத் தாக்கின என்று கூறியுள்ளது. (ண-ந)

# சர்வதேச பயங்கரவாதம்: எதிர் நடவடிக்கைக்கு வற்புறுத்து

## ஐரோப்பிய உச்சி மாநாட்டில் பிரிட்டனின் யோசனைகள்

லண்டன், ஜூன் 4

பிரிட்டன், இவ்வாரம் கூடவிருக்கும் பொருளாதார வளர்ச்சியடைந்த ஏழு நாடுகளின் உச்சி மாநாட்டில், சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தும்.

இம்மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ம் திகதி வரை லண்டனில் இம் மாநாடு கூடவுள்ளது.

உச்சி மாநாட்டில் அமுகம் விக்கும் மற்றைய மேற்கத்திய தலைவர்களை பயங்கரவாதத்துக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறு பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் வற்புறுத்துவார் என அறிக்கைகள் கூறுகின்றன.

லண்டனில் லிபியத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது லிபியர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவத்தின் பின் பிரிட்டன் ஆத்திரமுற்றிருக்கிறது.

3 அம்சத் திட்டமொன்றை பிரிட்டன் ஏற்கனவே வகுத்திருக்கிறது. உச்சி மாநாடு இதனை ஏற்குமென தாட்சர் கருதுகிறார்.

இத் திட்டத்திலுள்ள பிரேரணைகள் வருமாறு:—

* பயங்கரவாதத் தொடர்புகளினால் வெளியேற்றப்பட்ட இராஜதந்திரிகளின் பட்டியல் ஒன்றைத் தயாரித்தல், அவர்களைப் பற்றிய தகவல்களை இருட்டடிப்புச் செய்தல்.
* பயங்கரவாத அச்சுறுத்தற் செயல்களைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் நெருங்கிய கூட்டுறவு.
* பயங்கரவாத அச்சுறுத்தற் செயல்களை மேற்கொள்ளும் தனி நபர்களைப் பற்றிய செய்திப் பரிமாற்றம்.

கடந்த வாரம் மாட்ரிட்டில் கூடிய ஐரோப்பிய நீதி அமைச்சர்கள் கூட்டத்தில் பிரிட்டனின் யோசனைக்கு ஓரளவு ஆதரவு இருந்தது.

ஆனால் பிரிட்டனின் இருட்டடிப்புப் பட்டியல் பற்றிய யோசனையை இவர்கள் வரவேற்கவில்லை.

கடந்த ஏப்ரல் மாதம் லிபிய தூதரகத்தில் ஒரு பொலீஸ் பெண்மணி கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே பயங்கரவாதத்துக்கு எதிராக பிரிட்டன் நடவடிக்கை எடுத்து வருகிறது

பயங்கரவாதத்துக்கு எதிராக உச்சி மாநாட்டில் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தாட்சர் கருதுகிறார்.

ஜனாதிபதி றேகனின் பலமான ஆதரவு இவருக்குக் கிடைக்குமென உச்சி மாநாட்டு வட்டாரங்கள் கூறுகின்றன.

லிபியத் தலைவர் கேர்ணல் கடாபிக்கு எதிரான தமது வெறுப்பை ஏற்கனவே ஜனாதிபதி றேகன் வெளிப்படுத்தியுள்ளார். (ப-ந)

## மக்களும் பதவியும்

### ஹோமியோபதி பரீட்சையில் சித்தி



சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட ஹோமியோபதி இடைக்காலப் பதிவேட்டுப் பரீட்சையில் லக்ஸபான அரச தோட்டத்தில் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றும் திரு. ரெங்கசாமி நமசிவாயம் சித்தியடைந்தார்.

டிக்கோயா தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், அட்டன் புனித பொஸ்கோஸ் கல்லூரி பழைய மாணவராவார்.

கொழும்பு கார்கில்ஸ் நிறுவனத்தில் முன்னர் பார்மசிஸ்டாக இவர் கடமையாற்றினார். (எ)

### நிர்வாகிகள்

ஓட்டமாவடி, ஜூன் 4

ஏறுவூர் முஸ்லிம் கல்வி அபிவிருத்திச் சபையின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:—

தலைவர். ஜனாப் எஸ்.ஏ.ஆர். ஸாகிர் மௌலானா, உபதலைவர்கள்: ஜனாப்கள் ஐ.எம்.சி. முகமட் (பி-ஏ-), ஏ. எம். இப்றாகீம் (மௌலவி), செயலாளர்: ஜனாப் எம்.வை.எம். இப்றாகீம், நிர்வாகச் செயலாளர்: ஜனாப் ஏ. அப்துல் றகுமான், கல்விச் செயலாளர்: ஜனாப் எம்.எம்.ஏ. தாகா ஹுஸைன், பொருளாளர்: ஜனாப் யூ. எல். ஜுனைத்.

அத்துடன் அறுவர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

(எ- 236)

★

கொழும்பு, ஜூன் 5

ஸ்ரீலங்கா முஸ்லிம் மாணவர் சம்மேளன நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:

தேசியத் தலைவர்: ஜனாப் எம். எம். நௌஸாத், செயலாளர் நாயகம்: ஜனாப் சப்ரி. ஏ. காதர், பொருளாளர்: ஜனாப் எம்-எச்.எம். இல்யாஸ், உதவித் தலைவர்: ஜனாப் அமீர் ஹம்ஸா, உதவிச் செயலாளர்கள்: ஜனாப் அர்ஷாத், ஜனாப் எம்.வை.எம். அஷ்ரப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மத்திய செயற்குழு உறுப்பினர்களாக ஜனாப்கள் டீ. கே. அஸ்ஹர், எஸ். எம். இமாதுத்தீன்

தேயிலை, றப்பர், தெங்கு

# பெருந்தோட்ட அபிவிருத்திக்கு ரூ. 550 கோடி

## 1985இல் ஐந்தாண்டு திட்டம்

கொழும்பு, ஜூன் 5

தேயிலை, றப்பர், தெங்கு கைத்தொழிற் துறைகளின் அபிவிருத்திக்கு 550 கோடி ரூபா செலவில் இடைக்கால முதலீட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

ஐந்தாண்டு காலத்திற்குரிய இத்திட்டம் 1985 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கீழ் இயங்கும் சுமார் 530 பெருந் தோட்டங்கள் இந்த முதலீட்டுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும்.

உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி வழங்க உள்ளன.

இடைக்கால முதலீட்டுத் திட்டத்தில் இலங்கை அரசு 15 வீதத்தை முதலீடு செய்யும். இத் தொகை 79 கோடியே 40 லட்சம் ரூபாவாகும்.

இரு கூட்டுத்தாபனங்களும் 31 வீதமான, அதாவது 178 கோடி ரூபாவை முதலீடு செய்யும்.

சர்வதேச நிதி வழங்கும் இரு நிறுவனங்களும் 54 வீதமான 297 கோடியே 80 லட்சம் ரூபாவை வழங்கும்.

இவ்வாண்டு நவம்பரில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கி இத்திட்டத்திற்கு சில நிபந்தனைகளை விதித்திருக்கிறது. ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அரசு இந்த நிபந்தனைகளை அங்கீகரிக்க வேண்டும்.

பெருந் தோட்ட கைத்தொழிற் துறையில் இப்படியான ஒரு பாரிய திட்டம் இலங்கையில் மேற்கொள்வது இதுவே முதற் தடவையாகும் என மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிக்கள சீரமைப்பு, தொழிற்சாலை அபிவிருத்தி; தோட்ட தொழிலாளர் வாழ்க்கை நலம் ஆகிய மூன்று துறைகளுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

இந்த 550 கோடி ரூபா முதலீட்டில் 400 கோடி ரூபா தேயிலை கைத் தொழிற்துறைக்கு ஒதுக்கப்படும்.

அதன்படி மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய 177 தேயிலைத் தோட்டங்களும், 134 தொழிற்சாலைகளும், அரச தோட்ட கூட்டுத்தாபனத்திற்குரிய 228 தேயிலைத் தோட்டங்களும், 138 தொழிற்சாலைகளும் இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும்.

(ப-ங)

# அடையாள கார்ட்

## உயர் வகுப்பு மாணவரிடம் அவசியம் இருக்க வேண்டும்

### யாழ். பிரதம கல்வி அதிகாரி கருத்து

புங்குடுதீவு, ஜூன் 4

"அடையாளக் கார்ட்டின் அருமையினை இன்று மக்கள் நன்கு உணர்ந்துவிட்டனர். மாணவர்களுக்கு ஆட்பதிவுத் திணைக்களம் இதனை வழங்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இன்றைய சூழ்நிலையில் உயர் வகுப்பு மாணவர்கள் அனைவரும் அடையாளக் கார்ட் பெறுவதற்கு அதிபர்கள் துணை புரியவேண்டும்."

இவ்வாறு கூறினார் யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம்.

மாணவர்களுக்கு அடையாளக் கார்ட் வழங்குவது தொடர்பான கருத்தரங்கு ஒன்று புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே திரு. சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"அதிபர்கள், ஆசிரியர்கள், சமூகத்திற்கு வழிகாட்டிகளாகத் திகழவேண்டும். பாடசாலைகள் சமூகத்தின் கண்ணாடி போன்றவை. சமூகத்திற்கும் பாடசாலைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்.

சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளை பாடசாலைகளே முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதிபர்கள், ஆசிரியர்கள் இதனை நன்குணர்ந்து செயற்பட வேண்டும்.

அடையாளக் கார்ட் இன்று மிக அத்தியாவசியமான ஒரு பொருளாகி விட்டது. சட்டபூர்வமான பணிகள் அனைத்துக்கும் நம்மை உறுதிப்படுத்த அது தேவைப்படுகிறது. உயர்வகுப்பு மாணவர்கள் தவறாது அடையாளக் கார்ட் பெற வேண்டும். அதிபர்கள் அதற்குத் தூண்டுதல் அளிக்க வேண்டும்" இப்படி அவர் கூறினார். (எ- 240)

### தென்னை மரம் விழுந்ததால் சிறுவன் பலி

வெலிகாமம், ஜூன் 4

சமையல் அறையில் காலை உணவருந்திக் கொண்டிருந்த பள்ளிச் சிறுவர்கள் மீது திடீரென தென்னை மரம் ஒன்று விழுந்ததினால் எட்டு வயதுச் சிறுவன் அந்த இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தான். ஏனைய இரு சிறுவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

வெலிகாமம் பொலீஸ் வட்டாரத்தைச் சேர்ந்த கொலேதண்ட (பாலத்தடி) என்னும் இடத்தில் இப் பரிதாப சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

கொலேதண்டையைச் சேர்ந்த முகம்மது நசீர், முகம்மது நஜீம் என்ற எட்டு வயது பள்ளி மாணவனே இவ் விபத்தில் உயிரிழந்தவன் ஆவான்.

இம் மரணம் தொடர்பாக வெலிகாமம் நகர திடீர் மரண விசாரணை அதிகாரியும், சமாதான நீதிவானுமான ஆயுள்வேத வைத்தியர் திரு. எச். ஜீ. தர்மசேன விசாரணைகளை மேற்கொண்டார்.

மரண விசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (எ- 331)

# தமிழ்த்தின விழா போட்டிகள் மீண்டும் பாடசாலைகளில்

## கல்வி அமைச்சு ஏற்பாடு

பண்டாரவளை, ஜூன் 4

பாடசாலைகளில் மீண்டும் இவ் வருடம் முதல் தமிழ்த் தின விழாப் போட்டிகள் நடத்தப்படும். கல்வி அமைச்சு இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

15 வருட கால இடைவெளிக்குப் பின் தமிழ்த் தின விழாப் போட்டிகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு முன்வந்திருக்கிறது.

தமிழ்த் தின விழாப் போட்டிகள் சம்பந்தமாக கல்வி அமைச்சினால் சகல தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

முல்லைத்தீவில் தமிழ்த்தின விழாவின் இறுதிப் போட்டிகள் நடைபெறும். மாவட்ட ரீதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அகில இலங்கை போட்டிகளில் பங்குபற்ற வாய்ப்பு அளிக்கப்படும்.

முல்லைத்தீவில் இடம்பெறும் இறுதி விழாவில் போட்டியாளர்கள் கலந்து கொள்வதற்கு வாய்ப்பாக இலவச ரயில் பிர

# சட்டம், ஒழுங்கு என்பன நிலைக்க மக்கள் ஆதரவு தேவை



நிந்தவூர் விவசாய போதனாசிரியர் பிரிவில் தற்பொழுது மேற் கொள்ளப்பட்டு வரும்

சிரியர் ஜனாப் ஏ. எல். எம். இஸ்மாயில், தமது வெளிக்கள உத்தியோகஸ்தர்கள்

மத்திய செயற்குழு உறுப்பினர்களாக ஜனாப்கள் டீ. கே. அஸ்வர், எஸ். எம். இமாதுத்தீன், எம்.டீ.எம். முஸம்மில், எம். எம். நசீன், இஸட். எம். ஸவாகிர், எம்.டீ.எம். ரிஸ்வி, எம். ரியாஸ் மிஹ்லார், எம். டி. எம். பாகிம், ஏ. டபிள்யூ. அப்துல்லாஹ், கே. எம். அம்ரீ, எம். அப்துல் றஸாக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ– 11)

*

கொழும்பு, ஜூன் 5

தொட்டவத்தை கிராம கல்வி, பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:

தலைவர்: ஜனாப் எம்.சி.எச். எம். பௌஸ் உபதலைவர்: ஜனாப் எம்.எஸ்.எம். ஸகூப்தீன், காரியதரிசி: ஜனாப் ஏ. ஜே. அகமட் பளீல், உபசெயலாளர்: ஜனாப் எம்.எம்.எம். அஸ்லம், தனாதிகாரி: ஜனாப் எம்.எஸ்.எச்.எம். அமீர், உப தனாதிகாரி: ஜனாப் எம்.எச்.எம். மாகிர், போஷகர்: மௌலவி, அல்ஹாஜ் எஸ். எம். ஏ. எம். முஸம்மில் கலீபதுஷ் ஷாதுலி (பீ. ஏ.),

உப போஷகர்கள்: அல்ஹாஜ் எம்.எஸ்.எச்.எம். மௌசூல், ஜனாப் ஐ.எல்.எம்.எம். எகியா, ஜனாப் ஏ. டபிள்யூ எச். ஏ. சமி, ஜனாப் எம்.எல்.எம். ஷம்சுதீன், பொருளாதார ஆலோசகர்: அல்ஹாஜ் ஏ.எம்.எம். நாளிர், கல்வி ஆலோசகர்: ஜனாப் எம். எஸ். எம். ஸல்லதீன், சட்ட ஆலோசகர்: ஜனாப் ஐ.எல்.எம். எகியா.

அத்துடன் பதினெட்டுப் பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டிக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

(எ– 11)

*

சாய்ந்தமருது, ஜூன் 4

சாய்ந்தமருது நாலாம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:–

தலைவர்: ஜனாப் யூ. எல். ஆதம்பாவா, உபதலைவர்கள்: ஜனாப் ஏ. மீராசாய்பு, ஜனாப் எம். இஸ்மாலெவ்வை, செயலாளர்: ஜனாப் எம். எஸ். ஆதம்பாவா, உப செயலாளர்: ஜனாப் ஏ. சலீம், பொருளாளர்: ஜனாப் ஏ. உதுமாகண்டு.

ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்கள் விவரம்: ஜனாப் எம். ஏ. கபூர் (கணக்கீட்டு உத்தியோகத்தர்), ஜனாப் எம். எம். இப்ருகீம், ஜனாப் கே. அமீர், ஜனாப் எம். ஐ. ஆதம்பாவா, ஜனாப் எம். சீனிமுகம்மது, ஜனாப் ஏ. அலியார்பாச்சா, ஜனாப் ஏ. சுலேமாலெவ்வை, ஜனாப் எம். எம். உதுமாலெவ்வை ஆகியோர்.

(எ– 281)

# மக்கள் ஆதரவு தேவை

## பொலீஸ் அதிகாரி சொல்கிறார்

பண்டாரவளை, ஜூன் 4

1948 ஆம் ஆண்டு எமக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்தாலும் நாம் இன்னும் பொருளாதார சுதந்திரம் அடையவில்லை; பொருளாதார பிரச்சினை இருப்பதனாலேயே நாட்டின் அமைதிக்கும், சட்டத்திற்கும், கட்டுப் பாட்டுக்கும் குந்தகம் ஏற்பட்டு வருகிறது. நாட்டில் அமைதியையும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட பொது மக்களின் ஒத்துழைப்பும், ஆதரவும் தேவை.

இவ்வாறு கூறினார் ஊவா, கிழக்குப் பிரதேச பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரம சூரிய.

பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டாரவளை பொலீஸ் பகுதியில் பொலீசார் பொது மக்கள் ஆலோசனைச்சபையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பதுளை பொலீஸ் அத்தியட்சகர் திரு. ரந்தனிகல தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதி பொலீஸ் மா அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரம சூரியா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

பொதுமக்களுக்கும் பொலீசாருக்குமிடையே எப்போதும் நெருங்கிய உறவு இருத்தல் அவசியம்.

நாட்டில் குற்றச் செயல்களை ஒழிப்பதும், தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதும், சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் சம்பளம் பெறும் பொலீஸ் படையினரின் கடமை மாத்திரம் அல்ல.

பொதுமக்கள் எந்த அளவுக்கு இந்தத் துறையில் ஈடுபட்டு ஒத்துழைக்கிறார்களோ அந்த அளவுக்கே நாட்டில் அமைதி நிலைபெறும்.

பொதுமக்கள் பொலீசார் ஆலோசனைச் சபை ஏற்படுத்தப் படுவதனால் பொலீசாரின் குறைகளையும் நிவர்த்திக்க வாய்ப்புக் கிட்டும்.

வளர்ந்து வரும் ஒரு நாட்டில் அமைதியும் ஒழுங்கும் இருக்க வேண்டும். இல்லையேல் நாடு முன்னேற்றம் காண்பது கடினம்.

இவ்வாறு அவர் கூறினார்.

(எ–39)

## மொனராகலை நீர்ப்பாசன திட்டங்களுக்கு நிதி

பண்டாரவளை, ஜூன் 4

மொனராகலை மாவட்டத்தில் நான்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்க ஒன்பது லட்சத்து எழுபத்தி நாலாயிரத்து நூறு ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நீர்ப்பாசனத் திட்டங்களினால் எண்ணற்ற விவசாயிகள் நன்மை அடைவர்.

ஆயிரக்கணக்கான நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியும் கிட்டும்.

அனிமலஹெவெவ நீர்ப்பாசனத் திட்டத்திற்கு 1,95,000 ரூபாவும், வட்டாரம நீர்ப்பாசனத் திட்டத்திற்கு 3,34,100 ரூபாவும், அனுகபுவ திட்டத்திற்கு 4,00,000 ரூபாவும், ரிடிகாதோவ நீர்ப்பாசனத் திட்டத்திற்கு 45,000 ரூபாவும் செலவிடப்படும்.

இத் திட்டங்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(எ– 39)

இறுதி விழாவில் போட்டியாளர்கள் கலந்து கொள்வதற்கு வாய்ப்பாக இலவச ரயில் பிரயாண வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இறுதி விழாவிற்கான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

(எ– ங– 39)

நிந்தவூர் விவசாய போதனாசிரியர் பிரிவில் தற்பொழுது மேற் கொள்ளப்பட்டு வரும் சிறுபோக (இடைப்போகம்) நெற் செய்கையில், விவசாயிகள் நிரைவிதைப்பில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நிந்தவூர் விவசாய போதனாசிரியர் ஜனாப் ஏ. எல். எம். இஸ்மாயில், தமது வெளிக்கள உத்தியோகஸ்தர்கள் சகிதம் வயல் ஒன்றில் நிரை விதைப்பு மாதிரித்துண்டம் ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டிருப்பதைக் காண்க.

(எ–217)

# கிழக்கிலங்கை முஸ்லிம் நலனில் வை. எம். எம். ஏ. இயக்கம் அக்கறை

## இதற்கு நன்றி செலுத்தவேண்டும் என்கிறார் மஜீத்

நிந்தவூர், ஜூன் 4

"கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் நலனில் தேசிய கவுன்சில் வை. எம். எம். ஏ. இயக்கம் அதிக அக்கறை செலுத்தி வருகின்றது. அதற்கு நாம் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

பிரதி தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும், சம்மாந்துறை எம். பியுமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்க சஹ்ரு நிறுவனத்தினதும், வை. எம். எம். ஏ. தேசிய கவுன்சிலினதும் அனுசரணையுடன் பாலமுனையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அல்–மஸ்ஜிதுல் றஊப் பள்ளிவாசல், அல்–மத்ரசதுல் இக்பால் குர்ஆன் பாடசாலை என்பவற்றின் திறப்பு விழாவில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய கவுன்சில் கிழக்கு வலய தலைவர் டாக்டர் அல்ஹாஜ் ஏ. எல். எம். ஜெமீல் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதி அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

இந்த நாட்டில் எத்தனையோ முஸ்லிம் இயக்கங்கள் இருக்கின்றன. கிழக்கிலங்கையில் வாழும் வறிய முஸ்லிம் மக்களுக்கு தேசிய கவுன்சில் வை. எம். எம். ஏ. இயக்கம் அதிக சேவைகளை ஆற்றி வருகின்றது.

குறிப்பாக 1978 ஆம் ஆண்டு வீசிய சூறாவளியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை, பொலனறுவை மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு முப்பது லட்சம் ரூபா செலவில் வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளமையை நாம் என்றும் நினைவு கூர வேண்டும்.

எமது மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் எதிர்காலத்தில் மேலும் விரிவடைய வேண்டும். எமது பின் தங்கிய கிராமங்கள் அனைத்திற்கும் அவை பயனுள்ளவையாக அமைய வேண்டும்.

மேலும், இந்த அரசாங்கம் முஸ்லிம் சமய கலாசார விவகாரங்களுக்கென திணைக்களம் ஒன்றை உருவாக்கித் தந்தமைக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

ஏனைய மக்களுக்கு முன்மாதிரியாக நாம் இந்த நாட்டில் வாழ்ந்து காட்ட வேண்டும். அதற்கு நாம் எமது வாழ்க்கையில் இஸ்லாமிய நெறி முறைகளை சீரிய முறையில் கைக்கொள்ள வேண்டும்.

— இவ்வாறு அவர் கூறினார்.

(எ–217)

# கிளிநொச்சியில் விதை வெங்காயம் 5000 அந்தர் விநியோகம்

கிளிநொச்சி, ஜூன் 4

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி 5,000 அந்தர் விதை வெங்காயம் மிக விரைவில் விநியோகம் செய்யப்பட இருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் எடுத்திருக்கிறார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல கமநல சேவை நிலையங்கள் மூலம் வெங்காயம் விநியோகம் செய்யப்படும்.

விதை வெங்காயம் தேவைப்படும் விவசாயிகள் கிலோ ஒன்றுக்கு ரூபா பத்து வீதம் தமது பகுதிக் கமநல சேவை நிலையத்தில் முற்பணம் செலுத்தும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர்.

அடுத்த மாத முற்பகுதியில் தேவையான வெங்காயத்தை விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வட பகுதியில் அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக இப் பகுதி விவசாயிகள் பேரிழப்புக்குள்ளாகினர்.

எதிர்காலத்தில் வெங்காயத்தைப் பயிரிட விதை வெங்காயம் கூடப் பெற முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து இந்து கலாசார, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, தமிழ்நாடு விவசாய அமைச்சர் எம். காளிமுத்துவுடன் தொடர்பு கொண்டு இப் பகுதி விவசாயிகளுக்குத் தேவையான விதை வெங்காயத்தை இந்தியாவிலிருந்து அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்.

அதன் பயனாகவே தற்போது இவ் விதை வெங்காய விநியோகம் நடைபெற இருக்கின்றது.

(எ– 244)

# மரம் நடும் இயக்கம்

கண்டி, ஜூன் 5

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கண்டி ஜோர்ஜ் ஈ. டி. சில்வா பூங்காவில் மரம் நடும் இயக்கம் ஒன்று இன்று 5 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

கண்டி அரசாங்க அதிபர் ஏற்பாடு செய்திருக்கும் இவ் வேலைத் திட்டத்தின்படி அன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை மாணவர்கள் அனைவரும் ஒன்றுகூடுவர்.

பூங்காவில் இருந்து கண்டி தலதா மாளிகை வரையும் உள்ள பாதை இரு மருங்கிலும் அவர்கள் மரங்களை நடும் பணியில் ஈடுபடுவார்கள்.

இந்த வைபவத்தில் எம். பிக்கள், பாடசாலை அதிபர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

கண்டி அரச அதிபர் திரு. ஏ. பீ. தமுனுபொல இதனை அடுத்து நடைபெறும் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

(எ– 105)

# 'தொண்டர் ஆசிரியரை நிரந்தரமாக்குவதால்

## மலையக சிறுவர் வாழ்வு மலரும்'

எட்டியாந்தோட்டை, ஜூன் 4

மலையகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கி, மலையகச் சிறார்களுக்கு வளமான வாழ்வளிக்க வேண்டுமானால், அவ்வப் பாடசாலைகளில் கடந்த சில வருடங்களாகக் கடமையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும்.

இவ்வாறு தோட்ட மக்கள் நலன் புரிச் சபையின் தலைவர் திரு. என். பீ. ஜெயரத்தினம் கூறினார்.

களனி தமிழ் வித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எட்டியாந்தோட்டை கோளிங் குடும்ப அமைப்புச் செயலாளர் செல்வி வீ. நவலெட்சுமி "மலையக தமிழ் பாடசாலைகளும் தொண்டர் ஆசிரியர்களின் சேவையும்" என்ற தலைப்பில் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தார்.

திரு. ஜெயரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

மலையகப் பாடசாலைகள் ஒரு அளவாவது இயங்கிக் கொண்டிருக்கக் காரணம் தொண்டர் ஆசிரியர்களின் சிறந்த சேவையே ஆகும்.

அப்படியானவர்களுக்கு நியமனம் வழங்க அமைச்சு ஏன் தயங்குகின்றது என்பது தான் தெரியவில்லை.

வருடக் கணக்காக, வளமான வாழ்வை அளிக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் சேவை செய்யும் தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள்.

அவ்வப் பகுதியிலுள்ள இந்திய வம்சாவளியினரான தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதின் மூலமே மலையகச் சிறார்களுக்கு வளமான வாழ்க்கையை அளிக்க முடியும்.

மலையகச் சிறார்களின் கல்வியில் அக்கறையுள்ளவர்கள் எனது கூற்றை மனமுவர்ந்து வரவேற்பார்கள். அரசும், கல்வி அமைச்சும் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். தற்போது தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்க வேண்டும். இதன் மூலமே மலையகச் சிறார்களின் எதிர்காலத்தை வளமுள்ளதாக்க முடியும்.

— இவ்வாறு அவர் கூறினார்.

(எ–346)

## வானொலி

காலை —
5.30 நாதாஞ்சலி
5.35 திருமுறைப் பாடல்கள் எம். வேதாரண்யம்
6.00 சைவ நற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்கள்
7.00 புல்லாங்குழல் — பி. என். சுரேஷ்
7.30 மாகாணச் செய்திகள்
7.35 இசையமுதம்
8.05 வாத்திய மஞ்சரி
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை —
6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 கோபுர தரிசனம் — "சுதுமலை அம்மன் கோவில்

இரவு —
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8.00 உலகச் செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 முகத்தார் வீட்டில்
8.40 நாட்டுப்பாடல்
8.45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி
9.00 செய்திகள்
9.30 பாட்டு — ஏ. கே. கருணாகரன்

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 ஹெட்ஸ் அன்ட் டெய்ல்ஸ்
6.00 ரங்கன
6.25 பிளே ஹவுஸ்
6.55 செய்திகள் — தமிழ்
7.15 பியூசர் அட்ரக்சன்ஸ்
7.45 இசை நிகழ்ச்சி
8.15 செய்திகள் — சிங்களம்
8.35 இசை நிகழ்ச்சி (தொடர்ச்சி)
9.00 டிபரன்ட் ஸ்ட்ரோக்ஸ்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.50 ஜென்டில் டச்
10.30 உலகச் செய்திகள்
10.35 ஜென்டில் டச் (தொடர்ச்சி)

### ஐ. டி. என்.

[ஐ. டி. என் தலைமையகத்தின் ஆரம்ப வைபவம் பற்றிய விசேட நிகழ்ச்சிகள்]
4.30 ஆரம்ப வைபவ நிகழ்ச்சிகளின் நேரடி வர்ணனை
4.42 சம்பிரதாய விளக்கேற்றல்
4.50 பல்வேறு மத சடங்குகள்
5.15 கட்டுப்பாட்டு அறையைப் பார்வையிடல்
5.30 இராஜாங்க அமைச்சரின் தலைமையிலான

# விளையாட்டினால் நற்பண்புகள் வளர்கின்றன

## பிரதம கல்வி அதிகாரி கூற்று

நிந்தவூர், ஜூன் 4

"கல்வியின் முக்கியமான அம்சங்களுள் விளையாட்டுத் துறையும் ஒன்கும். இதன் மூலம் பல நற்பண்புகளை மாணவர்களிடையே வளர்க்கக் கூடிய வாய்ப்புகள் கிடைக்கின்றன"

அக்கரைப்பற்று வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர்ப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கல்முனை கல்வி மாவட்ட பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். ஐ. எம். சரீப் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் எம். ஏ. எம். சாபிடீன் தலைமையில், அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கில் போட்டி நடைபெற்றது.

பிரதம கல்வி அதிகாரி ஜனாப் சரீத் தொடர்ந்து பேசுகையில் கூறிதாவது:—

"விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் பங்கு கொள்வதன் மூலம் ஒழுங்கு, கட்டுப்பாடு, கண்ணியம் என்பவற்றுடன் நற்பண்புகளும் வளர்கின்றன.

விளையாட்டுகள் மூலம் வளரும் இந்த நல்ல பண்புகள், மாணவர்களின் பிற்கால சமுதாய வாழ்க்கைக்குப் பெரிதும் உதவுவதுடன் சமூகத்தில் மதிக்கத்தக்க அந்தஸ்தையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறது.

இங்கு வெற்றியீட்டிய மாணவர்கள் இத்துடன் தமது பயிற்சிகளை முடித்துக் கொள்ளாது தொடர்ந்தும் பயிற்சி பெற்று மாவட்ட ரீதியாகவும், அகில இலங்கை ரீதியாகவும் நடைபெறவிருக்கும் போட்டிகளிலும் வெற்றிகளை ஈட்ட வேண்டும்" — இவ்வாறு அவர் கூறினார்.

கல்முனை கல்வி அலுவலக கல்வி அதிகாரி ஜனாப் ரீ. இப்ருலெவ்வை பேசுகையில்,

"அக்கரைப்பற்று வட்டாரம் எப்பொழுதும் பல சாதனைகளை நிலைநாட்டி வந்துள்ளது. தூண்டி விடுவதற்கு எவருமற்ற நிலைகளிலும் கூட இங்குள்ளவர்கள் தமது சுயமுயற்சிகள் மூலம் பல சாதனைகளை ஆற்றி வந்துள்ளனர்.

விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதோடு மட்டும் நின்று விடாது நல்ல பண்புகளை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வர வேண்டும்" — என்றார்.

வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் எம். ஏ. எம். சாபிடீன் உட்பட பலர் உரையாற்றினர்.

26 பாடசாலைகள் பங்குபற்றிய இந்த போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை பிரதம கல்வி அதிகாரி ஜனாப் சரீப் வழங்கினார்.

(ந—217)

## சிரமதான மூலம் விளை. மைதானம் புனரமைப்பு

கிண்ணியா, ஜூன் 4

தம்பலகாமம், உதவி அரசாங்க அதிபர் பிரிவின், ஈச்சம் நகர் கிராம விளையாட்டு மைதானத்தை, ஈச்சம் நகர் கிராம வை. எம். எம். ஏ. கிளை இயக்கத்தினரும், புகாரி நகர் விளையாட்டுக் கழகமும் ஒன்றிணைந்து சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்தனர்.

இச்சிரமதானப் பணியை ஈச்சம் நகர் கிராம வை. எம். எம். ஏ. கிளை இயக்கத்தின் தலைவர் ஜனாப் எம். எச். நஸீர் முன்னின்று நடத்தினார்.

புகாரி நகர் விளையாட்டுக் கழகத் தலைவர், ஜனாப் எம். எஸ். சுபைபீர் (ஆசிரியர்), புகாரி நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், ஜனாப் ஏ. எம். ஏ. கமீது, முள்ளிப்பொத்தானை சமாதான நீதிவான், ஜனாப் ரீ. ஏ. றெசாக், ஈச்சம் நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், ஜனாப் ஏ. எல். ஜுனைதீன் ஆகியோர் இச்சிரமதானப் பணியில் கலந்து கொண்டனர்.

(ந—151)

## 19, 23 வயதுக்குட்பட்ட அணிகளின்

# கிரிக்கெட் போட்டி வெற்றி, தோல்வி இன்றி முடிவு

கொழும்பு, ஜூன் 5

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் 23 வயதுக்குட்பட்டோர் அணியொன்றுக்கும், 19 வயதுக்குட்பட்ட அணியொன்றுக்குமிடையே என். சி. சி. மைதானத்தில் நடைபெற்ற 3 நாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவுற்றது.

இப்போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள், சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களாவர்.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுலா சென்ற 19 வயதுக்குட்பட்டவர்கள் அணிக்கு பிரதித் தலைவராகச் சென்ற கட்டுகஸ்தோட்டை சென். அந்தனிஸ் கல்லூரி மாணவன் மார்லன் வொன் ஹாட் இப்போட்டியில் சதம் போட்டது குறிப்பிடத்தக்கது.

405 நிமிடம் துடுப்பெடுத்தாடிய இவர் 2 சிக்ஸர்களும், 5 பவுண்டரிகளும் உட்பட 113 ஓட்டங்களைப் பெற்றார்.

23 வயதுக்குட்பட்டோர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 219 ஓட்டங்களைப் பெற்றது.

நிர்மலால் பெரேரா ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு ஆடிய 19 வயதுக்குட்பட்டோர் அணி 6 விக்கட் இழப்புக்கு 302 ஓட்டங்களைப் பெற்றது.

ஓட்ட விபரம்:—

23 வயதுக்குட்பட்டோர் அணி — முதல் இன்னிங்ஸ் 219 ஓட்டங்கள்.

இரண்டாவது இன்னிங்ஸ்

19 வயதுக்குட்பட்டோர் அணி — முதல் இன்னிங்ஸ் 6 விக்கட் நட்டத்துக்கு 302 ஓட்டங்கள்.

(ந)

# விளையாட்டுப் பகுதி

## முதலாவது ஒரு நாள் போட்டி

# மேற்கிந்திய அணி 104 ஓட்டங்களால் வெற்றி

மான்செஸ்டர், ஜூன் 4

மேற்கிந்திய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையே மான்செஸ்டரில் நடைபெற்ற முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய

பெப்டிஸ்ட் பெற்ற 26 ஓட்டங்களே 2ஆவது கூடுதல் ஓட்டங்களாக இருந்தது.

இங்கிலாந்து துடுப்பெடுத்து ஆடியபோது வேகப் பந்து வீச்சாளர்கள் ஜோயெல் கார்னர் (18 ஓட்டங்களுக்கு 3 விக்கட்), மைக்கல் ஹோல்டிங் (32 ஓட்

## பாடசாலை நீச்சல் போட்டிகள் நாளை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 5

அகில இலங்கை பாடசாலைகளின் கனிஷ்ட நீச்சல் போட்டிகள் நாளை சென் ஜோசப்ஸ் கல்லூரி நீச்சல் தடாகத்தில் ஆரம்பமாகின்றது.

நாளை (ஜூன் 6) முதல் ஜூன் 9 ஆம் திகதிவரை இப் போட்டிகள் நடைபெறும் போட்டிகள் நடைபெறும். போட்டிகள் ஆரம்பமாகவுள்


## இன்றைய திரைகளில்

11-வது வாரம்!

ஒருதலை காதலின் விளைவுகளை சித்தரிக்கும் கண்ணீர் காவியம்

லிடோ
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30

மீபுர
(நீர்கொழும்பு)
6-00, 9-30

நியூ இம்பீரியல்
(மூதூர்)
6-00, 9-30

குமரன்
(மன்னார்)
6-00 9-30

சேகர், ரூபா, ரவிந்தர் உஷா நடித்த

ஒருதலை ராகம்
(கலர்)

கதை, வசனம், டைரக்ஷன்: இசை: ராஜேந்தர்

3-வது வாரம்!

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

கொன்கோட்
(தெஹிவளை)
10.30, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

5.15 கட்டுப்பாட்டு அறையைப் பார்வையிடல்
5.30 இராஜாங்க அமைச்சரின் தலைமையிலான பொதுக் கூட்டம்
6.45 ஐ. ட்.. என்னின் 5 வருட நிறைவு - பின்னோட்டம்
7.15 கதம்ப நிகழ்ச்சி
8.15 "ஹாம்லெட்" (சேக்ஸ்பியர் நாடகம்)

## இலவன்ஸ்டார் கிரிக்கெட்டில் வெற்றி

சாய்ந்தமருது, ஜூன் 4
கல்முனை "லக்கி" விளையாட்டுக் கழகத்திற்கும் சாய்ந்தமருது "இலவன் ஸ்டார்" விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது "இலவன் ஸ்டார்" விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

மேற்படி போட்டி கல்முனை ஸாஹிறாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய "இலவன் ஸ்டார்" கழகம் 25 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய "லக்கி" கழகம் 15 ஓவர்களில் 37 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கட்டுகளையும் இழந்தனர்.

"இலவன் ஸ்டார்" கழகம் சார்பில் எஸ். சகுறுதீன், நிசான், அஸீர், நைஸர் ஆகியோரும்,

"லக்கி" கழகம் சார்பில் அஸ்மி, பஸ்லி, அறபாத் ஆகியோரும் சிறப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றனர்.

மேற்படி போட்டிக்கு ஜனாப் எம். வை. ஹாறூன், ஜனாப் ஏ. இர்சாட் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (ந- 281)

ரில் நடைபெற்ற - முதலாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய அணி 104 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மேற்கிந்திய அணி 55 ஓவர்களில் 9 விக்கட் இழப்பிற்கு 272 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணி பதிலுக்கு 50 ஓவர்களில் எல்லா விக்கட்டுகளையுமிழந்து 168 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

இப்போட்டியில் மேற்கிந்திய துடுப்பாட்ட வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் ஆட்டமிழக்காமல் பெற்ற 189 ஓட்டங்களே ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை பெறப்பட்ட ஆகக் கூடிய ஓட்டங்களாகும்.

170 பந்துகளை எதிர்த்து ஆடிய ரிச்சர்ட்ஸின் 189 ஓட்டங்களில் 5 சிக்ஸர்களும் 21 பவுண்டரிகளும் அடங்கின.

இதற்கு முன் இந்திய வீரர் கபில்தேவ் உலகக் கிண்ணப் போட்டியில் சிம்பாப்வேக்கெதிராக ஆட்டமிழக்காமல் பெற்ற 175 ஓட்டங்களே இதுவரை சாதனையாக இருந்து வந்தது.

மேற்கிந்திய அணியின் ஆட்டத்தில் ரிச்சர்ட்ஸை அடுத்து வேகப்பந்து விச்சாளர் எல்டின்

ஆடியபோது வேகப் பந்து வீச்சாளர்கள் ஜொயெல் கார்னர் (18 ஓட்டங்களுக்கு 3 விக்கட்), மைக்கல் ஹோல்டிங் (32 ஓட்டங்களுக்கு 2 விக்கட்), எல்டின் பெப்டிஸ்ட் (38 ஓட்டங்களுக்கு 1 விக்கட்), மெல்கம் மார்ஷல் (20 ஓட்டங்களுக்கு 1விக்கட்).

அலன் லாம்ப் இங்கிலாந்து அணிக்காக 75 ஓட்டங்களைப் பெற்றார்.

ஓட்ட விவரம்:
மேற்கிந்தியா - 55 ஓவர்களில் 9 விக்கட் நட்டத்துக்கு

போட்டிகள் நடைபெறும் போட்டிகள் நடைபெறும். போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

150க்கும் மேற்பட்ட நீச்சல் வீரர்களும் வீராங்கனைகளும் இப்போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ளனர். (ந)

இங்கிலாந்து - 55 ஓவர்களில் 168 ஓட்டங்கள். (ந)



சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த சாளம்பைக் கேணி அஸ்-ஸிறாஜ் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

அதிபர் ஜனாப். வீ. எம். இப்றாஹீம் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்த வித்தியாலய மாணவியரின் உடற்பயிற்சிக் கண்காட்சியை படத்தில் காண்க.

[படங்கள்: ஏ. எல். எம். சலீம்]

(ந—217)

## புதிய தலைவர் தெரிவு

கொழும்பு, ஜூன் 5
இலங்கை தேசிய கரப்பந்தாட்ட கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவராக, திரு. சரித ரத்வத்தை மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இளைஞர் விவகார அமைச்சின் நிரந்தர செயலாளராகவும், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகமுமாக பணியாற்றுகிறார். (ந-ர)

## உதைபந்தாட்ட பயிற்சிக்காக தெரிவு

கொழும்பு, ஜூன் 5
முன்னாள் இலங்கை உதைபந்தாட்ட அணியின் தலைவர் பி. எச். எச். சாலி இங்கிலாந்தில் உதைபந்தாட்டப் பயிற்சி பெறுவதற்காக உதைபந்தாட்ட கட்டுப்பாட்டுச் சபையால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை இங்கிலாந்தில் பயிற்சிகளை மேற்கொள்வார்.

1962 இல் வங்காள தேசத்தில் நடைபெற்ற அகா கான் தங்கக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை அணிக்கு இவர் தலைமை தாங்கியிருந்தார். (ந)

## பாடசாலை றகர்

கொழும்பு, ஜூன் 5
இசிபத்தன கல்லூரி அணிக்கும், கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி அணிக்குமிடையே ஹவலொக் பூங்காவில் நடைபெற்ற றகர் போட்டியில், இசிபத்தன அணி 7-6 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 7-6 என்ற நிலையில் இசிபத்தன அணி முன்னணியில் நின்றது.

இசிபத்தன அணிக்காக நிமல் பெர்னாண்டோ, சந்தன தீப்தி ஆகியோர் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

கிங்ஸ்வூட் அணிக்காக அதுல செனரத்தும், ரோய் இப்றாஹிமும் புள்ளிகளைப் பெற்றனர்.

லயனல் அல்மேதா இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளின் போட்டியில் இசிபத்தன அணி 18-0 புள்ளிகளால் வெற்றி பெற்றது. (ந)

*

தேர்ஸ்டன் கல்லூரி அணிக்கும், வெஸ்லி கல்லூரி அணிக்கும் இடையே லோங்டன் பிளேஸில் நடைபெற்ற றகர் போட்டியில் தேர்ஸ்டன் அணி 36-0 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 10-0 புள்ளிகளால் தேர்ஸ்டன் அணி முன்னணியில் நின்றது.

சந்தன ஜயவீர, கிறிஸ்டோபர் லக்ஷ்மன், கெலும் பெரேரா, அமல் பொதேஜு, நிமல் குலதுங்க ஆகியோர் தேர்ஸ்டன் அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

லூரி மாணவன் மாலவொன் ஹராட் இப்போட்டியில் சதம் போட்டது குறிப்பிடத்தக்கது.

அணி - முதல் இன்னிங்ஸ் 6 விக்கட் நட்டத்துக்கு 302 ஓட்டங்கள். (ந)

# இல்ல விளையாட்டு போட்டிகள்

## வெலிகாமம்

வெலிகாமம், ஜூன் 4
அம்பாந்தோட்டை யக்கஸ்முல்ல முஸ்லிம் வித்தியாலய இல்லங்களுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை ஜின்னா இல்லம் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டியில் இரண்டாம் இடத்தை ஜாயா இல்லம் பெற்றது.

வித்தியாலய அதிபர் ஜனாப் எம். எச். எம். அன்ஸார் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு வீரகெடிய உதவி அரசாங்க அதிபர் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

வித்தியாலய விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஜனாப் எம். ஏ. எம். அத்தாஸ் நன்றியுரை கூறினார். (ந-331)

## கல்முனை

மருதமுனை, ஜூன் 4
கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியின் கனிஷ்ட பிரிவின் விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி நடைபெறும்.

கல்லூரியின் "கிறிஸொஸ்ரம் கிறீன்" விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கு, கல்லூரி அதிபர் சங். சகோதரர் எஸ். ஐ. ஏ. மத்தியூ தலைமை வகிப்பார்.

3 ஆம், 4ஆம், 5ஆம் வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் மட்டுமே இப்போட்டிகளில் கலந்து கொள்வர்.

இம்மாணவர்களின் அணி நடை, உடற்பயிற்சி என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறும். (ந-190)

## அனுராதபுரம்

கொழும்பு, ஜூன் 5
அனுராதபுரம் அனுத்கம தாறுஸ் ஸலாம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் ஜனாப் ஏ. கே. எம். ஸதிக் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் அரபா இல்லம் 350 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், சபா இல்லம் 309 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மர்வா இல்லம் 297 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இல்லங்களுக்கான வெற்றிக் கேடயங்களை விளையாட்டுக் குழுச் செயலாளர் ஜனாப் என். எம். ராஸிக் (ஆசிரியர்) வழங்கினார்.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு அனுராதபுர மேற்குத் தொகுதி எம். பியும் அனுராதபுர மாவட்ட அமைச்சருமான திரு. கே. டி. எம். சி. பண்டார பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

அனுராதபுர பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம். அபூபக்கர், வட்டாரக் கல்வி அதிகாரி ஜனாப் எஸ். எம். ஏ. றஷீத், ஜனாப் பி. ஹபீப் நகராண்மன்ற உறுப்பினர் ஜனாப் எச். றௌவ்ப் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். வீ (ந)

நிமல் லூக் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (ந)

கட்டுகஸ்தொட்டை சென் அந்தனீஸ் கல்லூரி அணிக்கும், சென் ஜோசப்ஸ் கல்லூரி அணிக்கும் இடையே நித்தவலையில் நடைபெற்ற றகர் போட்டியில் சென். அந்தனீஸ் அணி 15-3 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

ஏ. ஆர். எம். நளீப், எஸ். எம். ராஜா, ஏ. எம். ஸடவன்ஸ், எம். ஏ. றஷீட் ஆகியோர் சென் அந்தனீஸ் அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தனர்.

மைக்கல் பெரேரா சென். ஜோசப்ஸ் அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார். (ந)


(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சாந்தி
(மட்டுநகர்)
2.00, 6.00, 9.30,

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
ஒளி விளக்கு
(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)


## புத்தளத்தில் பலத்த காற்று

புத்தளம், ஜூன் 4
புத்தளத்தில் சனிக்கிழமை இரவு கடுங்காற்று வீசியது. இதனால் மக்கள் பீதியடைந்து தங்களின் இருப்பிடங்களுக்கு ஓடி தஞ்சம் அடைந்தனர்.

அன்று மாலை 6.30 மணியளவில் கடுங்காற்று வீச ஆரம்பித்தது. இரவு 11.00 மணியளவில்தான் அது ஓய்ந்தது. சுமார் 5 மணித்தியாலம் மக்கள் பீதி கொண்டிருந்தனர்.

மணிக்கு 20 முதல் 25 மைல் வீதம் காற்று வீசியது. அது படிப்படியாக 10 ஆகக் குறைந்து ஓய்ந்தது.

தாழமுக்கம் மிகவும் குறைந்திருந்ததே கடும் காற்று வீசுவதற்கு காரணமாக இருந்ததென வானிலை அவதான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ண- ந- 241)

## பதவி உயர்வு

கொழும்பு, ஜூன் 5
அரசாங்க கணக்காளர் சேவையின் முதலாந் தரத்துக்குப் பத்துப் பேர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளனர்.

அவர்களுள் திருவாளர்கள் எஸ். சிவஞானசுந்தரம், எஸ் கே. வல்லிபுரம், ரி அரியரத்தினம், என் திருநாவுக்கரசு, எம். எஸ். கந்தசாமி ஆகியோரும் அடங்குவர். (ண- க)

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்


## பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாதிருப்பதற்கு இந்தியாவே காரணம்

### பிரதமர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 5

தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியா புகலிடம் அளிப்பதால் தான், பயங்கரவாதச் செயல்களை இங்கு ஒழிக்க முடியாமல் இருக்கிறது. இப்பொழுது உலக நாடுகளும் இந்தியாவையே குறை கூறுகின்றன.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு மத்திய தொகுதியில், குறைந்த வாடகை வீடுகளை அதன் குடியிருப்பாளர்களுக்கு சொந்தமாக்கும் உறுதிப் பத்திரங்கள் வழங்கும் வைபவம், ஞாயிறு காலை கொழும்பு கச்சரித்த மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது, அவர் கூறியதாவது:—

கடந்த இரண்டு வருட காலத்தில் சாதாரண மக்களின் நலனுக்காகச் செலவிடவிருந்த கோடிக்கணக்கான பணம் வீணாக செலவிடப்பட வேண்டி ஏற்பட்டிருக்கிறது. வடக்கில் ஒரு சிலர் ஆரம்பித்திருக்கும் தீவிரவாத நடவடிக்கைகள் தான் இதற்குக் காரணம்.

இந்தப் பயங்கரவாதிகளை ஏன் ஒழிக்க முடியாது? என்று சிலர் எங்களைக் கேட்கின்றனர்.

பயங்கரவாதிகள், இலங்கைக்கு 20 மைல்களுக்கு அப்பால் உள்ள தமிழ் நாட்டில் முகாம்களை அமைத்து, விசேஷ ஆயுதப் பயிற்சிகளை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இவற்றுக்காக அவர்களிடம் போதிய அளவு பணமும், ஆயுதமும் இருக்கிறது. இங்குள்ள இளைஞர்களை கூட்டிச் சென்று அங்கு பயிற்சியளிக்கிறார்கள்.

இருந்தனர். எவ்வளவு நாளைக்குத் தான் இவ்வாறு சகித்துக் கொண்டிருப்பது?

அமெரிக்கத் தம்பதிகளை கடத்திச் சென்ற சமயம், அது தொடர்பாக இந்தியாவிலிருந்து அறிக்கை விடுத்தவர் பத்மநாபா என்னும் தமிழ் வாலிபரே.

இந்திரா காந்தியினதும், ராமச்சந்திரனதும் வேண்டுகோளின் பேரிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்றும் பத்மநாபா அறிவித்திருந்தார். இக்கதை, பெட்டிக்குள் ஒழித்து வைத்திருந்த பூனை கீழே விழுந்தது போலல்லவா இருக்கிறது?

எமது இராணுவத்தினர், இங்கிருந்து கொண்டு மதுரைக்குத் தாவ முடியுமா? இந்தியாவிலிருந்து கொண்டு எமது நாட்டுக்கு கேடு விளைவிக்கும் இந்த பயங்கரவாதிகளின் செயல்களினால் எமது நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவும் அதிகரித்து வருகின்றது.

வட பகுதியிலுள்ள அப்பாவித் தமிழ் மக்கள், ஒரு சில தீவிரவாதிகளின் செயல்கள் காரணமாக அச்சத்துடன் வாழ்கிறார்கள். அங்கு பல ஆண் பிள்ளைகள் இருக்கும் ஒரு குடும்பத்தில், ஒருவரை தீவிரவாதிகள் பலவந்தமாக அழைத்துச் சென்று, பயங்கரவாதத்தில் ஈடுபடுத்தி விடுகின்றனர்.

இலங்கையின் 500 பயங்கரவாதிகள் இருப்பதாக, தமிழ் நாடு பொலீஸ் அதிபர் கூறியிருக்கிறார்.

"பிரேமதாசா சும்மா பயந்துகத்துகிறார்" என்று சிலர் குறை கூறுகின்றனர்.

பொதுமக்களைப் பற்றி நினைக்காது, பலமான படை ஒன்றை

நாட்டுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும். பயங்கரவாதிகளை எம்மால் அழிக்க முடியாமல் இருப்பதும் இதனால் தான்.

இந்தியா பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் அளிப்பதை விட, எங்களை ஆக்கிரமிப்பது எவ்வளவோ மேல்.

பயங்கரவாதிகள் தமது கொள்கையை கைவிடுவது எப்போது? இவர்கள் தமது கொள்கையை கைவிட்டால் இதைவிட சலுகைகளை சகல மக்களுக்கும் பெற்றுக் கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

— இவ்வாறு பிரதமர் சொன்னார்.

கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உதவி ஆணையாளர் திரு. டீ. எல். விஜேந்திர உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

(ப—11)

## ஆசிரியர்களின் சம்பள மீளாய்வு அமுல் செய்ய வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 5

தயாரத்ன சம்பள மீளாய்வுக் குழு அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து ஆசிரியர்களின் சம்பள உயர்வு தொடர்பான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

அகில இலங்கை அரசாங்க ஆங்கில ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சர் திரு. ரணில்விக்கிரமசிங்காவிடம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

தயாரத்ன மீளாய்வுக் குழுவின் சிபாரிசின்படி சேவையிலுள்ள 1 லட்சத்து 59 ஆயிரம் ஆசிரியர்கள் நன்மை அடைவார்கள்.

மேலும் கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விசேட படி வழங்கும் படியும், விசேட தகைமைகள் உள்ளவர்களுக்கு உயர்ந்த சம்பளம் வழங்கும்படியும் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

அதேவேளை ஆசிரியர்களதும், மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்களதும் சேவையின் தன்மை, பயிற்சி வசதிகள், பதவி உயர்வுகள், சம்பளம் போன்றவற்றை ஆராய கமிஷன் ஒன்றை நியமிக்கும்படியும் கல்வி அமைச்சரிடம் மேற்படி சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

(ர)

### வடக்கில் ஜீப் கடத்தல்

கொழும்பு, ஜூன் 5

சைக்கிள்களில் வந்த இரண்டு துப்பாக்கி இளைஞர்கள் நல்லூரில் வைத்து சுங்க இலாகாவிற்குச் சொந்தமான ஜீப்வண்டி ஒன்றை கடத்தினர். எனினும் இடைவழியில் ஜீப்பை கைவிட்டுச் சென்றனர்.

ஜீப் கடத்தப்பட்ட போது சாரதி மாத்திரமே ஜீப்பில் இருந்தாராம். இளைஞர்கள் சைக்கிள்களை ஜீப்வண்டியில் போட்டுக் கொண்டு சென்றனர். ஆனால் இடைவழியில் பயணத்தை தொடர முடியாத நிலையில் ஜீப்பை சங்கானையில் கைவிட்டு விட்டு, சைக்கிள்களை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

இது தொடர்பாக யாழ். பொலீஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

(ப—மு)



### இஸ்ரவேல் நலன் காப்பு பிரிவு

## மாணவர் மஜ்லிஸ் கண்டனம்

கொழும்பு, ஜூன் 5

இலங்கையில் இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவு அமைக்கும் தீர்மானத்தை மொரட்டுவைப் பல்கலைக்கழக இஸ்லாம் மாணவர் மஜ்லிஸ் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக மஜ்லிஸ் இஸ்லாம் தலைவர் ஜனாப் எம். எஸ். அமானுல்லாஹ் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

இஸ்ரவேலின் நலன்காப்புப் பிரிவொன்றை இங்கு திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதை அறிந்து நாம் அதிர்ச்சி அடைந்தோம். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை எமது மஜ்லிஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

லட்சக் கணக்கான பலஸ்தீனிய முஸ்லிம்களைக் கொலை செய்தும், இரவோடு இரவாகத் துரத்தியும் அமைக்கப்பட்ட சர்வதேச பயங்கரவாதிகளின் நாடாகிய இஸ்ரவேலின் நலன் காப்புப் பிரிவை இங்கு திறப்பது, தேசிய பங்கரவாதிகளை ஒடுக்க சர்வதேச பயங்கரவாதிகளை அழைக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

சியோனிஸ பயங்கரவாதிகளைக் கட்டுப்பாடு இன்றி நாட்டினுள்ளே அனுமதித்தால் அதன் விளைவு புற்றுநோயை விடக் கொடியதாகவே அமையும்.

அரசாங்கத்தின் இத் தீர்மானத்தை முழுமூச்சுடன் எதிர்க்குமாறு சகல இலங்கைப் பிரஜைகளையும், குறிப்பாக முஸ்லிம்களை வேண்டிக் கொள்கிறோம். முஸ்லிம் தலைவர்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து இவ் விடயத்தில் அரசாங்கத்தைக் கண்டிக்குமாறு வேண்டுகிறோம்.

இந்த நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடுமாறு அரசாங்கத்தைக் கோருகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(ப- 7)

## சீனி இறக்குமதி செய்ய விரும்புவோர்

...வு பணமும், ஆயுதமும் இருக்கிறது. இங்குள்ள இளைஞர்களை கூட்டிச் சென்று அங்கு பயிற்சியளிக்கிறார்கள்.

எமது இராணுவத்தினர் இலங்கையை விட்டு வெளியே செல்ல முடியாது. இந்நிலையில், இந்தியாவை தாக்கிப் பேசுவதாக சிலர் என்னைக் குறை கூறுகிறார்கள்.

கடந்த ஜூலை வன்செயல்களை அடுத்து: வடக்கில் பிரச்சினைகள் எதுவும் எழுந்தால் கலவரமடைய வேண்டாம் என்று நாம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டோம். அவ்வாறே பொதுமக்களும் எமது பேச்சைக் கேட்டு அமைதியுடன் ...

... கூறுகின்றனர்.

பொதுமக்களைப் பற்றி நினைக்காது, பலமான படை ஒன்றை அமைக்க எம்மால் முடியும். ஆனால், நாம் ஆட்சிக்கு வந்தது யுத்தம் புரிவதற்கு அல்ல. மக்களை நலமாக வாழ வைக்கவே நாம் ஆட்சிக்கு வந்தோம்.

நான் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி இந்த நிலைமையை முழு உலகிற்கும் எடுத்துக் காட்டினேன். "பிரேமதாசா எங்களை பகைத்துக் கொள்ளப் போகிறார்" என்று இந்திய பத்திரிகைகள் கூறுகின்றன.

இலங்கையின் பயங்கரவாதிகளுக்கு இந்தியாவில் அடைக்கலம் அளித்திருப்பது எமது ...



போலி பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும் போலிக் கச்சேரி ஒன்று இயங்குவதை மாளிகாவத்தை பொலீஸார் ஞாயிறன்று கண்டுபிடித்தனர். மாளிகாவத்தையின் சில வீடுகளில் இருந்து பொலீஸார் மீட்ட போலி பிறப்புச் சான்றிதழ்களை கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி, கொழும்பு அரசாங்க அதிபர் திரு. எசல நவரட்ன, மாளிகாவத்தை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஆர். பி. சிறிபால, மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. கே. ஏ. குணரட்ன ஆகியோர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# போலி "கச்சேரி" கண்டுபிடிப்பு

## 10 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜூன் 5

சட்ட விரோதமாக போலிப் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கி வந்த நடமாடும் "கச்சேரி" ஒன்றை மாளிகாவத்தை பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக தரகர்கள் உட்பட 10 பேரைப் பொலீஸார் கைது செய்தனர். உயர் அதிகாரிகள் பாவிக்கும் 11 போலி றப்பர் ஸ்டாம்புகளையும், ரோனியோ இயந்திரம் ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றினர்.

கடந்த மூன்று வருட காலமாக இந்தப் போலி அத்தாட்சிப் பத்திரங்கள், கச்சேரியில் வேலை செய்யும் சில ஊழியர்களின் உதவியுடன் வழங்கப்பட்டு வந்திருப்பது பொலீஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்தது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்பவர்களின் வயது எல்லையைக் குறைத்து அல்லது கூட்டி இவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கி வந்திருப்பதாகவும் விசாரணைகளில் இருந்து அறிய வந்தது.

போலி அத்தாட்சிப் பத்திரங்களைப் பார்வையிட கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி, அரசாங்க அதிபர் திரு. ஏ. நவரட்ன, மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் மாளிகாவத்தை பொலீஸ் நிலையத்திற்கு வந்தனர்.

மாளிகாவத்தை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஆர். பீ. டி. சிரிபாலாவின் உத்தரவின் பேரில் சப் இன்ஸ்பெக்டர் சுரஜித் குமாரபேலி, சார்ஜன்ட் ஜனுப் சம்சுதீன் ஆகியோர் விசாரணை செய்து வருகின்றனர். (ண- மு)

# செய்ய விரும்புவோர்

## பதிவு செய்யும்படி உத்தரவு

கொழும்பு, ஜூன் 5

சீனி இறக்குமதி செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யத் தவறுவோருக்கு, சீனி இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

உணவுக் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அனுமதியைப் பெற்ற பின்னரே, இறக்குமதியாளருக்கு இதற்கான அனுமதி வழங்கப்படும். (எ-ர)

# ஏருவூரில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 5

ஏருவூர் பகுதியில் பல கொலை, கொள்ளை, ஆயுத திருட்டுக்கள் சம்பந்தமாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவரை பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இந்த சந்தேக நபர் காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாகன் என அழைக்கப்படும் நாகலிங்கம் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

பிரஸ்தாப சந்தேக நபர் வாகனம் ஒன்றில் வருவதாக ஏருவூர் பொலீஸாருக்கு தகவல் கிடைத்தது. ஏருவூர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. தியோபிளஸ், சப் இன்ஸ்பெக்டர் திரு. ஏக்கநாயக்க ஆகியோர் தலைமையில் பொலீஸ் கோஷ்டி ஒன்று வான் ஒன்றில் அந்தப் பகுதிக்கு விரைந்தனர்.

ஏருவூர் ருகம் பகுதியில் இந்த நபர் பொலீஸாரைக் கண்டார். வானில் இருந்து இறங்கி தப்பி ஓட முயன்றார். அவர் கையில் இருந்த துப்பாக்கியால் சுட முயன்றார். பொலீஸார் இரண்டு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர் சுருண்டு விழுந்தார்.

அவரிடம் இருந்தது விளையாட்டுத் துப்பாக்கி என பின்னர் தெரிய வந்ததாம்.

இந்த சந்தேக நபர் தீவிரவாத இயக்கத்துடனும் தொடர்பு உடையவர் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (ப-மு)

### இயற்கை அனர்த்தங்களினால்

# களுத்துறையில் 766 வீடுகள் சேதம்

கொழும்பு, ஜூன் 5

களுத்துறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவு, வெள்ளப் பெருக்கு ஆகியவற்றினால் 766 வீடுகள் முற்றாக சேதம் அடைந்திருக்கின்றன.

களுத்துறை சமூக சேவைகள் திணைக்களம் இத் தகவலைத் தெரிவித்தது.

மத்துகமையில் 328 வீடுகளும், அகலவத்தையில் 350 வீடுகளும், புளத்சிங்களத்தில் 88 வீடுகளும் முற்றாகச் சேதம் அடைந்திருக்கின்றன.

இதனால் இந்த வீடுகளில் வசித்த சுமார் 40,000 பேர் அகதிகளானார்கள்.

சேதம் அடைந்த வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கையை சமூக சேவைகள் திணைக்களம் எடுத்து வருகிறது. (ண)

# வாழ்த்துச் செய்தி

கொழும்பு, ஜூன் 5

இத்தாலியின் தேசிய தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன அந்நாட்டு ஜனாதிபதிக்கு வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

டியூனீஷியாவின் தேசிய தினத்தை முன்னிட்டு அந்நாட்டு ஜனாதிபதிக்கும் வாழ்த்துச் செய்தியொன்றை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன அனுப்பி வைத்திருக்கிறார். (ப-7)

# போதை வஸ்து இளைஞர்கள் கைது

ஹெரோயின் என்ற போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டிருந்தார்கள் என்று கூறப்படும் 11 இளைஞர்களை கொட்டாஞ்சேனை பொலீஸார் கைது செய்தனர்.

கொட்டாஞ்சேனை, பாபர் வீதியிலுள்ள அரசாங்க மாடி வீட்டில் வசிக்கும் இளைஞர்களே கூட்டாக இணைந்து, போதைப் பொருளைப் பாவித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டிருப்பவர்கள் 18 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜரு. லக்ஷ்மண் டி சில்வா தலைமையிலான பொலீஸ் கோஷ்டியே இளைஞர்களைக் கைது செய்தது. (ண-11)

# இந்திய வெளிவிவகார உதவிச் செயலர் வருகை

கொழும்பு, ஜூன் 5

இந்திய வெளிவிவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திரு. எஸ். கே. புட்டானி ஞாயிறன்று இலங்கை வந்திருந்தார்.

மாலைதீவுக்குச் செல்லும் வழியிலேயே அவர் இங்கு தங்கினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் நீண்டகால மோசடி

## கோடி ரூபா நஷ்டமென அறிவிப்பு

சந்தைப் படுத்தும் திணைக்களத்தில் நீண்ட காலமாக நிலவும் மோசடி நடவடிக்கைகளால் சுமார் ஒரு கோடியே 15 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

உள்ளூர் கணக்காய்வுத் திணைக்களத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றிலிருந்தே இத்தகவல் வெளியாகியிருக்கிறது.

திணைக்களத்தைச் சேர்ந்த 200 அதிகாரிகள் இம் மோசடிகளில் சம்பந்தப்பட்டிருப்பதும் விசாரணைகள் மூலம் வெளியாகியுள்ளன.

இவர்கள் தற்போது வேலையிலிருந்தும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

சுமார் ஆறு லட்ச ரூபா மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஒருவரும் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

இம் மோசடிகளைத் தவிர்க்கு முகமாக வர்த்தக அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிரியின் ஆதரவுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (எ-ர)

# சுகாதார ஊழியருக்கு புதிய சம்பளத் திட்டம்

## மீளாய்வுக் குழு நியமிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 5

சுகாதார சேவை ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக "சுகாதார சேவை சம்பள மீளாய்வுக்குழு" ஒன்று நியமிக்கப்படும்.

அத்தியாவசிய சேவையாகக் கருதப்படும் சுகாதாரசேவை ஊழியர்களின் நலன்கருதியே இந்த சம்பள மீளாய்வுக்குழு நியமிக்கப்படுகின்றது என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

போதியளவு சம்பளம் கிடைக்காதமையால், டாக்டர்கள், தாதிமார் உட்பட சுகாதார ஊழியர்கள் பலர் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை நாடிச் செல்கின்றனர். இதனால் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள், தாதிமார் ஆகியோருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இவர்களுக்காக சம்பள மீளாய்வுக் குழு ஒன்றை நியமிப்பதன் மூலம், இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும் என்று அமைச்சு நம்புகிறது.

இதேவேளை, சுகாதார சேவையை தடையின்றி நடத்த வேண்டுமானால், அத்தகைய ஊழியர்களுக்கு தனியான சம்பளத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்று, தேசிய சுகாதார ஊழியர் சங்க செயலாளர் திரு. டக்ளஸ் அபேதிர, சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவிடம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதனையடுத்தே சம்பள மீளாய்வுக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ண-11)

# அண்டவெளி ஆய்வு நிறுவனம்

அண்டவெளி விஞ்ஞான ஆய்வு இஸ்லாமிய நிறுவனம் ஒன்றை அமைப்பதென்று இஸ்லாமிய பேரவை அமைப்பு திட்டமிட்டிருக்கிறது. (ண)

தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12. (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 5 ஜூன் 1984.

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1,2 P. O. Box 1613.